422

குண்டூசி

ஜூலை. 49. எட்டு அணா

OF THE REGISTRAR OF ...
12 AUG 1949
MADRAS

2-10

பாக்யா பிக்சர்ஸ்
மங்கையர்க்கரசி
டைரக்ஷன்..
ஜித்தன் பானர்ஜி
உதவி..
P.T. மூர்த்தி
சின்னப்பா
கண்ணம்பா
அஞ்சலி தேவி
கிருஷ்ணன்
மதுரம்
லலிதா
..பத்மினி..
ஸ்டுடியோ
நியூடோன்
.MUHIL.
விவரங்களுக்கு F நாகூர், 21 மண்டபம் ரோடு, கீழ்ப்பாக்கம் சென்னை 10

மகத்தான ஆரம்பம்
ஆகஸ்ட் 6ஆ முதல்
விநோதமான கதை...
விசித்திரமான சம்பவங்கள்
அலங்காரமான தயாரிப்பு
இவையெல்லாம் சேர்ந்த
உல்லாசச் சித்திரம்...
ஜூபிடரின்
கன்னியின்
காதலி
ராம்நாத்-சேகர்
தயாரிப்பு
டைரக்ஷன்-ராம்நாத்
அஞ்சலி தேவி - மாதுரி தேவி
எம். எஸ். எஸ். பாக்கியம்
எஸ்.எ.நடராஜன்-கே.ஆர்.ராம்சிங்
கே.ஸாயிராமன்-கே.சாரங்கபாணி
புளிமூட்டை ராமஸ்வாமி-கழுத்தது
நடனங்கள்-லலிதா-பத்மினி........
ஸ்டூடியோ-சென்ட்ரல்
JUPITER PICTURES CIRCUIT

இன்று இந்தியாவுக்குத் துரோகம் செய்வது யார்?

இதற்கு பதிலை ...
சாந்தாராமின்

ஈடு இணையிலா உன்னதச்
சித்திரத்தில் தெரிந்து கொள்ளுங்கள்

ராஜ்கமல் கலாமந்திரின்

நம் நாடு (தமிழ்)

சங்கீதம் :
பாபநாசம் ராஜகோபாலய்யர்

பாட்டுகள் :
எம். எல். வசந்தகுமாரி

*

அப்னாதேஷ் (ஹிந்தி)

*

அப்னாதேஷ்

(ஹிந்தியில்-தெலுங்கு பாட்டுகளுடன்)

கவி : உடுகூரு சத்யநாராயண ராவ்

பாட்டு : டி. சூர்யகுமாரி

*

- * புஷ்பா ஹன்ஸ் (புது நக்ஷத்திரம்)
- * கேசவராவ் தாதே
- * உமேஷ் சர்மா
- * மன்மோஹன், கிருஷ்ணா,

முதலியோர் நடிப்பது

மாகாணம் முழுவதும் எல்லா முக்கியமான நகரங்களிலும் இப்பொழுது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

தி அலங்கார் சித்ரா லிமிடெட்.

7, கெம்பகௌடா ரோடு :: பெங்களூர்-2

தந்தி "ALANKAR,"

போன் : 2663

உங்களுக்குத் தேவையான
எல்லாவித ஜவுளிகளுக்கும்
இன்றே

விஜயம் செய்யுங்கள்

Meerans

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னாட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில் ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்
இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

★

மற்றும் ட்வீட்கள், உல்லன்,
வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன

★

எஸ். மீரா சாகிப்
அண்ட் பிரதர்ஸ்
38, ஈவ்னிங் பஸார் ரோடு,
சென்னை.

தலைமை ஆபீஸ்:
19, கிடங்குத் தெரு, சென்னை-1.

MADRAS

பட்டை 2. ஊசி 10.

ஜூலை 1949

இந்த ஊசியில்

புது யுகம்	தலையங்கம்	5
உள்ளது உள்ளபடி	'ஜடாயு'	6
கடைசிச் செய்திகள்		7
ராஜம்மா	வாழ்க்கை வர்ணனை	10
எம். வி. ராஜம்மா	வர்ணப் படம்	17
டி. ஏ. ஜெயலக்ஷ்மி	ஆர்ட் படம்	18
பாபி! (சிறு கதை)	கே. மஹாதேவன்	19
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	23
செய்திப் படங்கள்	படங்கள்	31
பொது ஜனம் பேசுகிறார்	கடிதங்கள்	39
புஸ்தகப்போழுது	புஸ்தக விமர்சனம்	45
நுனிப்புல்	'வெட்டுக்கிளி'	47
பி. எஸ். சரோஜா	ஆர்ட் படம்	51
அஞ்சலி தேவி	வர்ணப் படம்	52
துப்பறியும் சாம்பு	நாடக விமர்சனம்	55
கன்னியின் காதலி	திரைக் கதை	56
இது செய்தி	படச் செய்திகள்	61
பிரம்மலோகம்	ஸ்டுடியோச செய்திகள்	64

குண்டூசி காரியாலயம்:
25, கிடங்குத் தெரு, சென்னை-1.
டெலிபோன்: 4316.

வருஷ சந்தா: இந்தியா, இலங்கை-ரூ. 6.
பர்மா, முதலிய வெளி நாடுகள்-ரூ. 9.
தனிப் பிரதி: இந்தியா—அணா. 8.
இலங்கை-சதம் 50. வெளிநாடு-அ. 12.

ரூபாய் 500 இனம் !

உமா கோல்ட் கவரிங் ஒர்க்ஸ், (G) உமா மஹால், மசூலிப்பட்டணம்

உமா கோல்டு கவரிங் போஸ்டாபீஸ்

ஓர் உயர்த்த உலோகத்தின் மேல் அசல் தங்கத் தகட்டினுல் சுற்றப்பெற்று வெல்டிங் செய்தது. அப்படி இல்லை என்று நிரூபிப்பவர்களுக்கு 500 ரூபாய் இனம். நாங்கள் தயார் செய்யும் தங்க கவரிங் நகைகளின் மேல் UMA என்ற எழுத்துக்களைப் பார்த்து வாங்குங்கள், பொன் நிறம். 10 வருஷம் உத்திரவாதம்.

பரீக்ஷை செய்ய வேணும் என்பவர் உமா ஆபாரணங்களை நைட்ரிக் ஆஸிட் என்கிற திராவகத்தில் போடவும். நேட்டு 5 நிமிஷத்திற்குள் கவரிங் செய்த பொன் வரும். இப்படி பரீக்ஷை செய்தவர் அநேகம் பேர்கள் எங்களுக்கு சர்டிபிகேட் கொடுத்தார்கள். 800 டிசைன் கொண்ட கேட்லாக் இனம். உள்நாடுகளை விட இதர தேசங்களுக்குக் கேட்லாக் விலையைவிட 25% அதிகம்.

N. B.—ஆபரணங்கள் வி. பி. சார்ஜ் 0-15-0 அணு மாத்திரம்.

Tel : " UMA ", Masulipatam.

3411

பட்டை 2
ஊசி 10

தண்டூசி

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

ஜூலை
1949

புது யுகம்

தமிழ்ப்பட உலகில் புது யுகம் தோன்றி விட்டது. தமிழ்ப் படங்கள் மிக மட்ட ரகத்தைச் சேர்ந்தவை என்று இனி யாரும் சொல்ல முடியாது. அன்னிய பாஷைப் படங்களை நாம் விரும்பிப் பார்த்துக் கொண்டிருப்பதற்குப் பதில், நம் படங்களை அன்னிய பாஷையினர் விரும்பிப் பார்க்கும் காலம் வந்து விட்டது. **சந்திரலேகா** மூலம் எஸ். எஸ். வாஸன் இந்தப் புது யுகத்தை ஆரம்பித்து வைத்து விட்டார்.

சந்திரலேகா வட இந்தியாவில் இணையில்லாத பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இப்படத்தின் வெள்ளிவிழா பம்பாயில் இம்மாதம் 28-ந் தேதி கொண்டாடப் படப் போகிறது. இதை ஒட்டி, சினிமா உலகம் சந்தோஷப்படக் கூடிய இன்னொரு செய்தியும் கிடைக்கிறது.

பிரேக் என்ற ஐரோப்பிய நகரில் இம்மாதக் கடைசியில் நடைபெறவிருக்கும் சர்வதேச சினிமாப் படக் கண்காட்சியில் காட்டப்படுவதற்கு இந்தியாவின் சிறந்த படமாக **சந்திரலேகா** இந்திய சர்க்காரால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. ஹிந்தி **சந்திரலேகா**வின் பிரமாத வெற்றியே இந்திய சர்க்காரை இவ்விதம் தீர்மானிக்கச் செய்திருக்கிறது.

சில வருஷங்களுக்கு முன், "தமிழ் நடிகர்கள் நடித்த ஒரு படத்தை வடநாட்டில் வெற்றிகரமாகக் காட்டலாம்" என்று யாராவது கூறினால் சிரிப்பே வரும். அவ்விதம் இருக்க தமிழ் நடிகர்கள் நடித்த ஒரு படம் சர்வதேசப் படக் காட்சிக்குத் தேர்ந்தெடுக்கப் படும் என்று கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் அந்தக் கனவையெல்லாம் சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்பே **மங்கம்மா சபதம்** நினைவாக மாற்றி வைத்தது. இப்பொழுது **சந்திரலேகா**வும் இந்தப் பெருமையை அடைகிறது. தமிழனின் பெருமை உலகப் பிரசித்தமாகி வருகிறது.

சர்வதேசக் காட்சியில் **சந்திரலேகா**வுக்குக் கிடைக்கும் ஆதரவு எதிர்கால இந்திய சினிமாப் படங்களுக்கு அன்னிய மார்க்கெட்டை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடும். தமிழ் நாட்டிலிருந்து வட இந்தியாவுக்கு மட்டுமல்ல; அன்னிய நாடுகளுக்கும் நம் படங்கள் செல்லும் காலம் அதிக தூரத்திலில்லை என்று நாம் நினைக்கிறோம்.

உள்ளது உள்ளபடி

"ஜடாயு"

சினிமா விஷயத்தில் சென்னை சர்க்கார் அக்கரை காட்ட ஆரம்பித்து விட்டது சந்தோஷத்துடன் வரவேற்கத் தக்கது. சினிமாத் தியேட்டர்களில் புகை பிடிப்பதைத் தடுக்கும் சட்டத்தை அவர்கள் மாகாணம் பூராவிலும், சென்னை நகரிலும் அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார்கள். தியேட்டருக்குள் அடைபட்டுப் படம் பார்ப்பதே தேக நலத்திற்கு உகந்ததல்ல. அப்படியிருக்க கொஞ்ச நஞ்சம் உள்ள காற்றையும் புகையாக மாற்றி சுவாசிக்க வேண்டி யிருந்தால் அது தேகத்திற்கு கெடுதல் என்பதில் சந்தேகமே யில்லை.

சர்க்கார் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி வைத்திருப்பது மட்டும் போதாது. தியேட்டர்காரர்கள் ஒவ்வொருவரும் இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருகிறார்களா என்று கண்காணிக்க வேண்டும். இச் சட்டத்தை சில தியேட்டர்காரர்கள் அமுலுக்குக் கொண்டு வரவில்லை என்று இப்பொழுதே புகார்கள் வரத் தொடங்கி விட்டன. ஆரம்பத்திலேயே இப்படி யிருந்தால் பிறகு இச் சட்டம் பயனற்றதாகவே போய்விடும்.

சிறுவர்களுக்கு நல்ல காலம்

சர்க்கார் இன்னொரு முக்கியமான சட்டத்தையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர். அதாவது, "பெரியவர்களுக்கு மட்டும் தான் காட்டலாம்" என்று சர்க்கார் தீர்மானிக்கும் படங்களை தியேட்டர்காரர்கள் சிறுவர்களுக்குக் காட்டக் கூடாது என்பது அது. இச் சட்டத்தை நம் சர்க்கார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பே கொண்டு வந்திருக்க வேண்டும். நம் சிறுவர்களை பிஞ்சிலே பழுத்துப் போகாமல் தடுப்பதற்கு இச்சட்டம் மிகமிக அவசியம்தான்.

1947-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் தியேட்டர் முதலாளிகள் - தொழிலாளிகளின் தகராறு சம்பந்தமாக விசாரணைக் கமிட்டி தீர்ப்பளித்தது. இருபது மாதங்கள் ஆகியும்கூட சில தியேட்டர் முதலாளிகள் சர்க்காரின் உத்தரவுப்படி நடக்கவில்லை என்று தெரிகிறது. இவற்றிலிருந்து, 'சர்க்கார் ஏதோ சட்டங்களை ஏற்படுத்தி விடுகின்றனர்; ஆனால் அது அமுலுக்கு வருகிறதா என்று கவனிப்பதில்லை' என்று நிச்சயமாகிறது. இதுபோல நடக்குமானால் சர்க்கார் எத்தனை சட்டங்களைத்தான் ஏற்படுத்தினாலும் பயனேற்படாது.

தியேட்டர்காரர்களின் கடமை

தற்காலத்தில் படங்களுக்கு நஷ்டம் ஏற்படும்போது அந்த சுமை பட முதலாளிகளின் தலையிலேயே விழுகிறது. முன்பெல்லாம் தியேட்டர்காரர்கள் சதவிகித முறையில் படங்களைக் காட்டி வந்தனர். இப்பொழுதோ அது மாறி, வாடகை முறை அதிகரித்து வருகிறது. இதனால் படத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும், லாபம் ஏற்பட்டாலும் தியேட்டர்காரர்களுக்கு ஒன்றுமில்லை. அவர்களுக்கு வாடகை கிடைத்து விடுகிறது. அப்படியிருக்க தம் ஊழியர்களின் கோரிக்கைகளை (சர்க்காரின் தீர்ப்பை), அவர்கள் நிறைவேற்றி வைக்காமலிருப்பது துளியும் சரியாகாது. தம் ஊழியர்களுக்கு மட்டுமன்றி, பொது மக்களுக்கும் அவர்கள் வேண்டிய சௌகரியங்களைச் செய்து தரும்படி வற்புறுத்த வேண்டும். சர்க்காருடன் அவர்கள் முழுமனதுடன் ஒத்துழைத்து அவர்கள் நிறைவேற்றி யிருக்கும் சட்டங்களைச் சரிவர அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

கடைசிச் செய்திகள்

கெயிட்டி மீது தடை நீங்கியது

'சென்னை கெயிட்டி தியேட்டரில் 6-7-49 வரை தம் படங்களைத் தவிர வேறு படங்களைக் காட்டக் கூடா' தென நேஷனல் பிக்சர்ஸார் பெற்ற இடைக்கால தடைஉத்தரவை முன்பே ஹைக்கோர்ட் தள்ளிவிட்டது. இம் மாதம் 18-ந் தேதி ஸிடி ஸிவில் ஜட்ஜ் இந்த வழக்கையே தள்ளிவிட்டார்.

தீ விபத்து

பெரியகுளம் தாலுக்காவைச் சேர்ந்த ஆண்டிப்பட்டியிலுள்ள ராமலிங்கம் டாக்கீஸில் இம் மாதம் 14-ம் தேதி ஒரு தீ விபத்து ஏற்பட்டது. விபத்தால் பதினெட்டாயிரம்ரூபாய் நஷ்டம் என்று தெரிகிறது.

பம்பாய் விபத்துப் படம்

இம் மாதம் 12-ம் தேதி பம்பாய் அருகே டச்சு விமானம் விபத்திற்குள்ளானதை, இந்திய சர்க்காரின் பில்ம் இலாகா படமாகத் தயாரித்துத் திரையிட்டிருக்கிறது.

சுகந்தா

பம்பாய், ஸ்ரீனிவாஸ பக்தஜன சபாவின் அங்கத்தினர்கள் சென்ற மாதம் 26-ம் தேதி **சுகந்தா** என்ற சமூக நாடகத்தை நடித்தனர். அன்றைய நாடகம் சிறப்பாக அமைந்தது.

வசுந்தரா தேவி மீது வழக்கு

பாஸ்கர் பிக்சர்ஸ் சொந்தக்காரரான நந்தலால் சினிமா நடிகை வசுந்தராதேவி மீது ஐந்து லக்ஷ ருபாய்க்கு தொடர்ந்துள்ள நஷ்ட ஈடு தாவா இம் மாதம் 21-ந் தேதி ஆரம்பமாயிற்று.

நாட்டிய ராணி படத்தில் கதாநாயகி பாத்திரத்தை நடிக்க ஒப்புக் கொண்ட வசுந்தரா ஒப்பந்தப்படி நடக்கவில்லை யென்பது வாதி நந்தலால் சொல்லும் கட்சியாகும்.

நம் நாடு

டைரெக்டர் சாந்தாராம் தமது அப்னா தேஷ் என்ற ஹிந்திப் படத்தில் தமிழ் வசனம், பாட்டுகளைச் சேர்த்து நம் நாடு படமாக ஆக்கி இருக்கிறார். எஸ். ஏ. துரை தமிழ் வசனங்களை எழுதியிருக்கிறார். இதற்கான பாட்டுகளை பாபனாசம் ராஜகோபால அய்யர் இயற்றியிருக்கிறார். எம். எல். வஸந்த குமாரியின் இனிய கானங்கள் படத்தில் இருக்கின்றன. கே. ஸ்ரீனிவாஸ், செல்லம் போன்ற தமிழ் நடிகர்கள் பலர் குரல் கொடுத்திருக்கின்றனர்.

கள்ள மார்கெட் அட்டூழியங்களைக் கண்டித்து எழுதப்பட்டிருக்கிறது இப் படத்தின் கதை.

" இதென்னடா, ராமு, பெண் வேஷம் போட்டுண்டிருக்கே! நாடகத்தில் நடிக்கப் போறியா?"

" அதெல்லாம் இல்லையப்பா. மூணு நாளா முண்டியடிச்சும் சினிமாவுக்கு டிக்கெட் கிடைக்கலெ. பெண்களுக்குன்னா சுலபமாய்க் கிடைக்கிறது. அதனாலே தான் இந்த வேஷம்!"

—ஆர். எம். ஹனீபா, கொழும்பு

நீங்கள் படித்தீர்களா?

மனோரஞ்சிதம்

சுவையான நாவல்
எஸ். எம். சந்தானம்
எழுதியது

விலை: 12 அணா

*

இரண்டு கதைகள்

சிறந்த ரஷ்யக் கதைகள்
தமிழாக்கம்: 'அசோகன்'

விலை: 8 அணா

*

இன்ப நாட்கள்

சிறந்த கதை
ஆசிரியர்: 'சுதர்சன்'

விலை: 6 அணா

*

விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனாம். ரூ. 1-12-0 M. O. செய்வோருக்கு 3 புத்தகங்களையும் - ரி. தபாலில் அனுப்பப்படும்.

விவரங்களுக்கு:

கலையகம்

14, ஏ. குப்பையர் தெரு,
ஜி. டி. சென்னை.

இந்த மாதம் 9-ம் தேதி முதல் சென்னை பிரபாத், சரஸ்வதி ஆகிய இரு தியேட்டர்களிலும் வெளியூர்களிலும் இப்படம் திரையிடப்பட்டுள்ளது. சென்னை பிரபாத்தில் ஆரம்ப தினத்தன்று டாக்டர் வி. கே. ஜான் தலைமை வகித்தாராம். அவர் படத்தின் சிறப்பை எடுத்துக் கூறிவிட்டு, சினிமா மீது வரி விதிக்கும் கொள்கையில் தம் அதிருப்தியையும் தெரியப்படுத்தினாராம்.

இம் மாதம் 15-ம் தேதி பிரபாத் டாக்கீஸிற்கு டைரெக்டர் சாந்தாராமும், அவரது மனைவி நடிகை ஜெயஸ்ரீயும் விஜயம் செய்தனராம். எஸ். ராமஸ்வாமி நாயுடு தலைமையில் அன்று விழா நடைபெற்றதாம்.

நாடகத்திற்குத் தடை

ஜெயந்த் ஜெயபால் என்ற தெலுங்கு நாடகம் வெகு ஆபாசமாக இருப்பதால் அந்த நாடகத்தை எங்கும் நடிக்கக் கூடாதென சென்னை சர்க்கார் இம் மாதம் 14-ம் தேதி தடை விதித்திருக்கிறது.

புகை பிடிக்காதே!

சென்னை நகரில் சினிமா, நாடக தியேட்டர்களில் பகல் காட்சி நடக்கும்போது புகை பிடிக்கக் கூடாதென தடை விதிக்க சர்க்கார் தீர்மானத்திருக்கிறது. மற்ற காட்சிகளில் புகை பிடிப்பதைக் கண்டிக்கும் ரீதியில் சர்க்கார் வெளியிட்டுள்ள உத்திரவு எழுதப்பட்ட போர்டுகளை தொங்கவிட வேண்டுமென தெரிவித்துள்ளனர். போலீஸ் சட்டம் 39-வது விதியைத்திருத்தி இந்த உத்திரவைச் சர்க்கார் பிறப்பித்திருக்கின்றனர்.

சிறுவர்களுக்கான படம்

1932-ம் வருஷத்திய சினிமா விதிகளை சென்னை சர்க்கார் திருத்தியிருக்கின்றனர். இதன்படி லைஸென்ஸ் பெற்றிருக்கும் தியேட்டர்காரர், சினிமாச் சட்டம் 7-வது பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படும் படங்களை முதியோர்களுக்கு மட்டும்தான் காட்ட வேண்டும். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளை இத்தடை பாதிக்காது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பதை
நன்றே விளக்கிடும் உன்னத தமிழ் சமூகச் சித்திரம்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின்

நவஜீவனம்

இப்பொழுது தமிழ்நாடு, ஆந்திர தேசம்
எங்கும் வெற்றியுடன் நடைபெறுகிறது

நாடகமேடையில் பிரபலமான பல கதைகள் சினிமாப் படங்களாக மாறியிருக்கின்றன. நம் நடிக நடிகைகளில் அநேகரும் நாடக மேடையிலிருந்து வந்தவர்களே. அதேபோல், சினிமாவின் மூலம் பிரபலமான சில கதைகளும் நாடகங்களாக நடிக்கப்பட்டிருக்கின்றன. சினிமா மூலம் ஜனங்களுக்கு அறிமுகமான சில நடிகர்களும் நாடக மேடையில் தோன்றி நடித்து வருகிறார்கள்.

நாடக மேடையில் பிரபலமானவர்கள் சினிமாவில் நடிக்கும் போது "நாடக மேடைப் புகழ் ஸ்ரீமான், அல்லது ஸ்ரீமதி......" என்று விளம்பரம் செய்வது வழக்கம். சினிமாவில் பிரபலமாய் விளங்குபவர்கள் நாடகம்

வி. ராஜம்மா

வாழ்க்கை வர்ணனை

களில் நடிக்கும் போதோ "சினிமாப் புகழ்" என்று விளம்பரம் செய்வது வழக்கம்.

முதன் முதலில் **சம்சார நௌகா** கன்னடப் படத்தில் எம். வி. ராஜம்மா நடித்த போது, அதன் முதலாளிகள் "நாடக மேடைப் புகழ் எம். வி. ராஜம்மா" என்று விளம்பரப் படுத்தவில்லை. காரணம், ராஜம்மா அதற்கு முன்பு நாடகங்களில் நடித்ததேயில்லை.

மேற்படி படத்தில் அவரது நடிப்பு நன்கமையவே, அவரை காலஞ்சென்ற மஹமது பீர் என்ற பிரபல நடிகர் தம் நாடகக்கம்பெனியில் சேர்த்துக் கொண்டு **சம்சாரநௌகா** கன்னட நாடகத்தில் நடிக்கச் செய்தார். அப்பொழுதென்னவோ '**சம்சாரநௌகா** சினிமாப் புகழ் ராஜம்மா' என்று விளம்பரம் செய்தார்கள். முதன் முறையாக மேடையேறிய ராஜம்மா படத்தை விட நாடகத்தின் மூலம் அதிகமான புகழைப் பெற்றார். காரணம், மஹமது பீர் ஒரு மஹோன்னத நடிகர். ஆகவே, அவரது மேற்பார்வையில் நடிக்கச் சென்ற ராஜம்மாவின் நடிப்பும் மிக சோபிதம் அடைந்தது ஆச்சரியப்படத்தக்க விஷயமா என்ன?

மஹம்மது பீர் கம்பெனியார் "சம்சார நௌகா" தவிர, "கௌதம புத்தர்", "ஷா ஜஹான்", "கிருஷ்ண லீலா", "சதாரம்", "பிரேம் லீலா" போன்ற பல நாடகங்களை சென்னையில் பல மாதங்கள் நடத்தினார்கள். இவைகளிலெல்லாம் ராஜம்மா கதாநாயகியாகத் தோன்றி, தாம் ஒரு சிறந்த நடிகை என்பதை சென்னை வாசிகளுக்கு நிரூபித்தார்.

மஹம்மது பீர் கம்பெனியில், ராஜம்மா ஏராளமான புகழ் பெற்று வந்தாரென்றாலும், அவரது நாட்டமெல்லாம் சினிமாப் படங்கள் மீதே இருந்தது. பல படங்களில் நடித்து, ஒரு கிராக்கி மிக்க நக்ஷத்திரமாக விளங்க வேண்டுமென்பதையே அவர் லக்ஷியமாக்கிக் கொண்டார். இந்த லக்ஷியத்தை பூரணமாய் அடைவதற்கு ஒரு மஹாமஹா காலத்திற்கு மேல் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும் என்று அவர் அப்பொழுது நினைத்திருக்கவே மாட்டார்.

ராஜம்மாவை அவரது லக்ஷியப் பாதையில் மீண்டும் இழுத்து விடுவதற்கு சினிமாத் தொழிலும் தயாராக இருந்தது. **கிருஷ்ண ஜராஸந்தா** தெலுங்குப்

படத்தில் நடிப்பதற்காக அவரை ஜெயா பிலிம் ஸ்டுடியோக்காரர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டனர். ராஜம்மா இப்படத்தில் சிரத்தையுடன் நடித்தார். அவரது நடிப்பு நன்கமைந்தது; படத்திற்கும் நல்ல வசூல் ஏற்பட்டது. முதல் படத்தில் அவர் அடைந்த பெயரை இப்படம் ஊர்ஜிதம் செய்தது. இவற்றை யெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மோஹன் மூவிடோன் கம்பெனியார், அப்பொழுது தாங்கள் தயாரிக்கத் தொடங்கிய யயாதி தமிழ்ப்படத்தில் நடிப்பதற்கு ராஜம்மாவை தைரியமாக ஒப்பந்தம் செய்து கொண்டனர். ராஜம்மாவும் தைரியமாகவே தமக்குத் தெரியாத தமிழ் பாஷைப் படத்தில் நடித்து முடித்தார். யயாதியில் ராஜம்மாவின் சம்பாஷணை பூரண சுத்தமாக இருக்க

இசை ராஜ்று



ஞான சௌந்தரி

வில்லை யென்றாலும் படு மோசமாய் இருக்கவில்லை. இப்படியாக ராஜம்மா சினிமா உலகில் நுழைந்ததும் நுழையாததுமாய் கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று பாஷைப் படங்களில் நடித்து முடித்தார். இந்தியா பூராவிலுமே தேடினால், மூன்று பாஷைப் படங்களில் நடித்த நடிகைகள் நான்கைந்து பேர்கள்தான் கிடைப்பர். அதுவும் தென்னாட்டில் ராஜம்மாவுக்குத் தான் அந்த முதல் பெருமையை அளிக்க வேண்டும். அவருக்கு அடுத்தபடி ஜெயம்மா ஒருவருக்கே இப்பெருமை கிடைக்கிறது. "அதுசரிதான் ராஜம்மாவை எந்த பாஷை நக்ஷத்திரம் என்று அழைப்பது?" என்று உங்களுக்கு தடுமாற்றம் ஏற்படுகிறதல்லவா? ராஜம்மா நடித்துள்ள பட ஜாபிதாவைப்

வேலைக்காரி





"அம்பிகாதேவி"யில் ராஜம்மா

பார்த்தால் இந்த சந்தேகம் ஒருவாறு தீர்ந்துவிடும். கன்னடத்தைத் தாய் பாஷையாகக் கொண்ட ராஜம்மா தமிழ்ப் படங்களிலேயே பெரும்பாலும் நடித்திருக்கிறார். அவருக்கு பெருவாரியான ஆதரவு கிடைத்திருப்பதும் தமிழ்ப்பட ரஸிகர்களிடமிருந்து தான்.

இன்னொரு காரணம் கூடச் சொல்லலாம். மைசூரைச் சேர்ந்தவராகத் தம்மை பாவித்துக்கொண்டு, தம் பெயருடன் "எம்" என்ற எழுத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கும் ராஜம்மாவின் சொந்த ஊர், சேலம் ஜில்லாவிலுள்ள சூலகிரி என்பதாகும். அவரது பெற்றோர்கள் பல வருஷங்களுக்கு முன்பே சூலகிரியை விட்டு பங்களூருக்குச் சென்று அங்கு வசித்துவந்தனர். ஆகவே, ராஜம்மா "தமிழ்ப் பட நக்ஷத்திரம்தான்" என்று சொல்லுவதற்கு பூரண உரிமை இருக்கிறதல்லவா?

ராஜம்மா 1920-ம் வருஷத்தில், லிங்காயத் ஜாதியைச் சேர்ந்த ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவரது தகப்பனரான நஞ்சப்பாவும், தாயாரான சுப்பம்மாவும் ராஜம்மாவை விவரிக்க முடியாத கஷ்டங்களுக் கிடையே மிகச் செல்வமாக வளர்த்து வந்தனர். ராஜம்மா மூன்றாவது குழந்தை. அவருக்கு ஒரு தமையனும் ஒரு தமக்கையும் பிறந்திருந்தனர். ஆனால் அவர்கள் பால்யத்திலேயே இறந்து விட்டனர்.

ராஜம்மா பிறந்த குடும்பத்தில் "பசி, பசி" என்ற துன்ப கீதம் நிறைந்திருந்தது. அப்படியிருக்க இனிய சங்கீதத்திற்கு அங்கு இடம்இருக்காதது ஆச்சரியமல்ல. ஆனால் அத்தகைய ஒரு குடும்பத்தில் ராஜம்மா இனிய குரலுடன் பிறந்ததும், சங்கீதப் பயிற்சி பெற்றதும்தான் மிக ஆச்சரியமான விஷயமாகும்.

சிறிய வயதிலேயே ராஜம்மா சிக்பெட்டிலுள்ள 'ஆரிய பாலகி மிடில் ஸ்கூலி'ல் சேர்ந்து சிரத்தையுடன் படிக்க ஆரம்பித்தார். அந்தப் பள்ளிக்கூடத்தில் சுப்பராவ் என்றொரு உபாத்தியாயர் இருந்தார். அவர் சங்கீத ஞானம் உடையவர். அவர் ராஜம்மாவின் சூடிகையான குணங்களையும், அவருக்கு சங்கீதத்தில் இயற்கையான பற்றுதல் இருப்பதையும் அறிந்து,சந்தோஷம் அடைந்து, தாமாகவே வலிய அவருக்குச் சங்கீத சிக்ஷை சொல்லி வைக்க ஆரம்பித்தார்.

சம்பளமில்லாமல் சங்கீதத்தைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்த ராஜம்மா,

மிருந்த அக்கறையுடன் மளமள வென்று சங்கீதத்தில் தேர்ச்சி பெற லானார். இதைக் கண்டு அவரது குருவே ஆச்சரியமடைந்து விட்டா ராம். கொஞ்ச கால சிக்ஷைக்குப் பிறகு ராஜம்மா தம் சங்கீத ஞானத் தைத் தாமாகவே மேலும் விருத்தி செய்து கொள்ள ஆரம்பித்தார்.

பள்ளிக்கூடத்தில் ராஜம்மா அவ ரது வகுப்பிலேயே துறுதுறுப்பு மிகு ந்த பெண்ணாக விளங்கி வந்தார். எந் தக் காரியத்திற்கும் "நான்" என்று முந்திக் கொண்டு விடுவாராம். பள் ளிக்கூடப் பெண்களெல்லாம் வருஷா வருஷம் நாடகங்கள் நடிப்பது வழக் கமாம். இந்த நாடகங்களில் ராஜ ம்மா தவறாமல் பங்கெடுத்துக் கொள்ளுவாராம். அவரிடம் துறுதுறுப்பும் அழகும் ஒருங்கே சேர்ந்திருந்ததனால், அவருக்கு அநேகமாக கிருஷ்ணன் வேஷ மே அளிக்கப் படுமாம், இந்த வேஷத்தில் அவர் ஒரு "நிபுணி" யாக விளங்கினார் என்று கூடச் சொல்லலாம். ஒரு முறை மைசூர் யுவராணி அவரது கிருஷ்ணன் வே ஷத்தை மிக மெச்சி பரிசு வழங்கியிருக்கிறாராம். அப் படியிருக்க மற்ற பிரபல நடிகைகளைப் போலவே ராஜம்மாவுக்கும் கிருஷ் ணன் வேஷத்தை நம் பட முதலாளிகள் இதுவரை

அளித்துப் பார்க்காதது ஆச்சரியமாகவே இருக்கிறது.

மூன்றாவது பாரத்துடன் ராஜம்மா தம் படிப்பை முடித்துக் கொண்டார். அவருக்குப் பதினாறு வயது ஆன போது அவருக்கும் வீரப்பா என்ற நாடக நடிகருக்கும் விவாஹம் நடந்தேறியது. (அவர் மைசூரைச் சேர்ந்த ஸ்ரீ சகுந்தலா நாடக மண்டலியில் நடித்து வந்தார்.) இதுவரை ராஜம்மாவுக்கு புத்திரபாக்கியம் ஏற்படவில்லை.

ஏழைக் குடும்பங்களில் பிறந்த அநேக பெண்களுக்கு விவாஹம் ஏழ்மையிலின்றும் விடுதலை அளித்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் ராஜம்மாவின் கஷ்டங்களோ விவாஹத்திற்குப் பிறகு பன்மடங்காக அதிகரித்து விட்டன. வீரப்பாவின் வருமானம் மிகக் குறைவாய் இருந்தது. உழைத்த கூலியும் ஒழுங்காய் கிடைக்கவில்லை. ஆனால் குடும்பச் செலவுகளோ ஏராளம். இதன் விளைவாக அக் குடும்பத்தினரிடையே பெருத்த மனஸ்தாபம் ஏற்படலாயிற்று. புதுத் தம்பதிகள் மனம் வெதும்பி தனிக் குடித்தனத்தை ஆரம்பித்தனர். வருமானத்தை அதிகரித்துக் கொள்ளுவதற்காக ராஜம்மாவும் கணவரைப் போலவே மேடையில் நடிக்க ஆயத்தம் செய்துவந்தார்.

இந்த சமயத்தில் மைசூர் கலா சேவக நாடக மண்டலியினர் சென்னையில் பல கன்னட நாடகங்களை நடத்தி ஜெயக்கொடி நாட்டி வந்தனர். அவர்களுடைய நாடகங்கள் அனைத்திலுமே "சம்சார நௌகா" சென்னை ரஸிகர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தது. அதன் காரணமாக தேவி பிலிம்ஸார் இந்த நாடகத்தை அதே நடிகர்களைக் கொண்டு படமாகத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்தனர். நாடக மேடையில் நடித்து வந்த சில நடிகைகள் சினிமாப் படத்திற்குப் பொருத்தமாய் இருக்க மாட்டார்கள் என்பது தெரியவந்தது. அதனால் பால்ய விதவை சரோஜாவின் வேஷத்திற்குப் புதிதாக ஒரு நடிகையைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. அந்தப் படத்தில் அசட்டு பாதுவாக நடித்துள்ள மாதவ

[தொடர்ச்சி 53-ம் பக்கத்தில்]

எம்.வி.ராஜம்மா

இப்பொழுது தமிழ் நாடு முழுவதி
லும் வெற்றிகரமாய் ஓடிக்கொண்
டிருக்கும் நவஜீவனம் தமிழ்ப்
படத்தில் டி. ஏ. ஜெயலக்ஷ்மி.

பாபி!

நாகர்கோயில் மகாதேவன்

சோ வென்று பேரிரைச்சலுடன் ரயில் நின்றபோதுதான் நான் கண்ணை விழித்துப் பார்த்தேன். எந்த ஸ்டேஷனில் அது நிற்கிறதென்பது தெரியவில்லை: ஜன்னலிலிருந்து எட்டிப் பார்த்ததில் அந்த மையிருட்டில், ஒன்றுமே தென்படக் காணோம். குளிர்ந்த காற்று முகத்தில் ஜில்லென்று அடித்தது. ஈன ஸ்வரத்தில் மணியடிக்கும் சப்தம் கேட்டது. ரயிலும் நகர ஆரம்பித்தது. அப்போது, யாரோ சிலர் அவசர அவசரமாக நான் இருந்த "கம்பார்ட்மென்டி"ல் வந்து ஏறினார்கள். "குஸ்ுமா, சீக்கிரம் ஏறிக்கோ...அதோ அந்த பின்னாலிருக்கிற 'பெஞ்சு'க்குப் போ...பெட்டியை பத்திரமாக வை..." என்ற வார்த்தைகள் எனது நித்திரையைக் கலைத்தன. கண்களை கசக்கிக் கொண்டு அந்த "தாமதப் பிரயாணிகளை"ப் பார்த்தேன். அதற்குள் அவர்கள் எனக்குப் பின்னால் காலியாக இருந்த இடத்திற்குப் போய்விட்டனர். ரயில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. நான் கொட்டாவி விட்டும், கையை முறித்தும், காலை முறித்தும் நித்திரையை வரவழைத்துப் பார்த்தேன். அந்தப் பாழாய்ப்போன நித்திரை ஒரு முறை கலைந்து விட்டதால் திரும்பவும் வரமாட்டேனென்று பிடிவாதமாக இருந்தது.

"அம்மா, தூங்கிவிடாதே! அடுத்த ஸ்டேஷன் விழுப்புரம். பொழுது விடியறதுக்குள்ளேயே பட்டணம் போயிடலாம் போலிருக்கு" என்று ஒரு பெண் குரல், என் பின்னாலிருந்து கேட்டது. அக்குரலைக் கேட்டவுடன் நான் திடுக்கிட்டு விட்டேன்; இருதயம் படீர் படீர் என்று அடித்தது: முகத்தில் வியர்வை அரும்பியது. மெதுவாக எழுந்து பார்த்தேன்; சந்தேகமேயில்லை. 'அவள்' தான் பேசினாள்...வேறு யாருக்கு அவ்வளவு இனிமையான குரல் இருக்க முடியும்? எனக்கு இருப்பே கொள்ளவில்லை; அப்படியே கீழே குதித்துவிடலாமா என்று கூட நினைத்தேன்......அவள் மீண்டும் மீண்டும் என்னென்னவோ பேசிக் கொண்டிருந்தாள். அந்தக் குரல் என்னை வதைத்தது. எனது நெஞ்சின் அடியிலே புதைந்து கிடந்த நினைவுகளை கிளறி விட்டு விட்டது—வெளியிலிருந்து வீசிய குளிர்ந்த காற்றைப்போல்! ஒரு காலத்தில் என்னை அக்குரல் எவ்வளவோ குளுமைப் படுத்தியிருக்கிறது?... அந்த நாட்கள் இனி வரவாபோகிறது? நான்தான் அவ்வின்ப நாட்களை சாகடித்து விட்டேனே!

2

பி. ஏ. பட்டம் பெற்று, ஒரு வேலையும் கிடைக்காமல் நான் திண்டாடிக் கொண்டிருந்த காலம் அது. எனது கிராமத்திலிருந்து கொண்டு, விவசாயத்தை கவனித்துவந்தேன் அந்தச் சமயத்தில்தான், சென்னையிலிருந்து என் நண்பன் ஹரிஹரன் அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்தது. சென்னையிலுள்ள ஒரு பிரபல தினப் பத்திரிகைக்கு உதவி ஆசிரியர் தேவையாயிருப்பதாகவும், என்னை அப்பத்திரிகாசிரியருக்கு, சிபாரிசு செய்திருப்பதாகவும், உடனே வந்தால் வேலையை ஒப்புக் கொள்ளலாமென்றும் எழுதியிருந்தான். காலேஜில் படிக்கும்போதே நான் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்திருக்கிறேன். நல்ல எழுத்தாளன் என்று எப்படியோ பெயரும் சம்பாதித்திருந்தேன். இது ஹரிஹரனுக்குத் தெரியுமாதலால் அவன் என்னைப் பற்றி சிபாரிசு செய்திருந்தான்.

கடிதம் கிடைத்த மறுநாளே சென்னை வந்து சேர்ந்தேன். ஹரிஹரன் அந்தப் பத்திரிகாசிரியரிடம் என்னை அழைத்துப் போனான். எனது நல்ல காலம் சுலபமாக வேலை கிடைத்து விட்டது. அன்றைக்கே வேலை பார்க்கவும் ஆரம்பித்து விட்டேன். ஹரிஹரன் எனக்குத் தங்குவதற்காக சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு மாடியை ஏற்பாடு செய்திருந்தான். வீட்டு சொந்தக்காரர்கள் கீழே வசித்து வந்தார்கள். கீழே இருந்த குடும்பத்தில் ஒரு வயோதிகர், அவர் மனைவி, வயது வந்த ஒரு பெண் இவ்வளவு பேரும் காணப்பட்டார்கள். சுமாராக

வாழ்வு நடத்தும் குடும்பமாகத் தென்பட்டது.

அன்று சாயங்காலம் வேலை முடிந்து நான் எனது அறைக்கு வந்தவுடன் என்னைப் பார்க்க அந்த வயோதிகர் வந்தார். "ஸார், உங்களைப் பார்த்தால் மிகவும் நல்லவர் போலிருக்கிறது. உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும். என் பெண் குஸுமாவுக்கு மூணு வருஷமாய் பிள்ளைதேடறேன். இதுவரை மனசுக்குப் பிடித்தமாய் ஒருவரனும் கிடைக்கலை. குஸுமா நல்ல அழகி. கிளி மாதிரி இருப்பாள் பிரமாதமாகப்பாடுவாள். பகவான் அவளுக்கு நல்ல சாரீரத்தையும் அளித்திருக்கிறார். இவ்வளவு அருமையான குழந்தையை கண்ணை மூடிண்டு யாருக்காவது கொடுக்க எனக்கு இஷ்டமில்லை. உங்க ஆபிஸிலேயோ, அல்லது வேறு எங்கேயாவதோ நல்ல பிள்ளையாக இருந்தால் தகவல் சொல்லுங்கள், ஸார். கலியாணத்திற்கென்று ஆயிரம் ரூபாய் வரையிலும் செலவு செய்யத் தயாராயிருக்கேன்" என்று கூறினார்.



"அதற்கென்ன, என்னாலான உதவியைச் செய்து தருகிறேன்" என்று சொல்லி அவரை அனுப்பி வைத்தேன்.

பாவம், உலக வழக்கம் தெரியாத பழங்கால மனிதர் போலிருக்கிறது. ஆயிரம் ரூபாயில் கல்யாணத்தை முடித்துவிடலாம் என நினைக்கிறார்-அதுவும் இந்தக் காலத்தில்! பெண் கிளியாயிருந்தாலென்ன, குயிலாய்ப் பாடினாலென்ன, அதையெல்லாம் யார் கவனிக்கிறார்கள்? "பணமில்லாதவன் பெண் 'கன்னியாகுமரி'யாகத்தான் இருக்கவேண்டும்" என்ற விஷயம் கிழவருக்குத் தெரியாது போலிருக்கிறது என்றெல்லாம் நினைத்துக் கொண்டேன்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு நான் அந்தக் 'கிளி'யைப் பார்த்துவிட்டேன். மாடியில் நான் ஏறும்போது அவள் வீட்டின் வெளியிலே நின்றுகொண்டிருந்தாள். தற்செயலாக என் கண்கள் அவளை தரிசித்து விட்டன. அவளும் என்னைப் பார்த்துவிட்டாள். ஒரு நிமிஷ நேரம் நான் மெய்மறந்து விட்டேன். பிறகு சமாளித்துக் கொண்டு என் அறைக்குள் நுழைந்தேன். கிழவர் குஸுமாவை ரொம்பவும் குறைவாக வர்ணித்துவிட்டார் என்பதுதான் என் அபிப்பிராயம். கிளியை அவளுக்கு எப்படி ஒப்பிட முடியும்? அவளது முகத்திலே கொட்டிக் கிடந்த அசாதாரணமான சௌந்

தரியத்திற்கு, அவளை 'தேவலோகத்துப் பெண்' என்றல்லவோ சொல்ல வேண்டும்-என்று நினைத்துக்கொண்டேன்.

இதற்கப்புறம், எத்தனையோ முறை நான் அவளைப் பார்த்தேன்; அவளைப் பார்க்க வேண்டும் என்பதற்காக மாடிக்கும் தெருவுக்குமாக நூறு தடவை ஏறி இறங்குவேன். அவளும் எதிர் பார்ப்பதுபோல் இண்ணையிலேயே நின்றுகொண்டிருப்பாள்.

இந்தக் 'கண்ணோடு கண் நோக்கும்' நாடகம் அதிகநாள் நீடிக்கவில்லை. வெகு சிக்கிரத்திலேயே நான் அவளுடைய குடும்பத்திற்கு ரொம்பவும் வேண்டியவனாகி விட்டேன். ஹோட்டலில் சாப்பிடுவது நின்று, அவளது வீட்டிலேயே சாப்பாடு ஆரம்பமாயிற்று. முன்பெல்லாம் நான் மாலையில் ஆபிஸிலிருந்து வரும்போது குஸ-மா பாடிக்கொண்டிருப்பாள். என்னைக்

கண்டதும் பாட்டு நின்றுவிடும். ஆனால், இப்பொழுதோ அவன் அப்படிச் செய்வதில்லை. பாட்டையும் நிறுத்துவதில்லை. நானும், அவன் எதிரில் போய் உட்கார்ந்துகொண்டு அதைப் பாடு, இதைப்பாடு என்பேன்; அவனும் பாடுவான். அவனுக்குச் சங்கீதத்தில் நல்ல தேர்ச்சியும், இனிமையான சாரீரமும் வாய்த்திருந்தது. பிறகு கேட்பானேன் பாட்டைப் பற்றி?

கிழவர் நாணுவய்யரும் அவர் மனைவியும் என்மீது யாதொரு விதமான சந்தேகமும் கொள்ளவில்லை. குஸுமாவும் நானும் பழகுவதை அவர்கள் ரொம்பவும் உற்சாகத்தோடு வரவேற்றார்கள். "நாளைக்கு தம்பதிகளாகப் போகிறவர்கள் தானே!" என்று நினைத்து விட்டார்களோ, என்னவோ! கிழவரும் நான் வந்த பிறகு மாப்பிள்ளை தேடுவதையே விட்டு விட்டார். அந்தக் கவலையையே மறந்து விட்டவர் போலிருந்தார் அவர்.

எனது தோற்றத்திலும் சுபாவத்திலும், குஸுமாவுடன் பழகிய பிறகு குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டு விட்டது. இதை ஹரிஹரனும் கவனித்து விட்டான்.

"அப்பனே, உன் காதல் விளையாட்டை வெறும் பொழுது போக்கென்று நினைத்து விடாதே, அதில் எவ்வளவோ சிக்கல்கள் இருக்கிறது" என எச்சரித்தான் ஹரிஹரன்.

"என்னடா சிக்கல்?" என்று நான் கேட்டேன்.

"சிக்கலா? நீ பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன்...குஸுமாவோ சர்வ சாதாரணமானவள். நீ அவளுடன் பழகுவது நன்றாயிருக்குமா? மேலும், நாணுவய்யர் தம்பதிகள், நீ அவர்கள் மாப்பிள்ளையாக வரப்போவதாக மனக்கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறார்கள்; ஊரெங்கும் சொல்லிக்கொண்டும் திரிகிறார்கள்; நீ வாஸ்தவமாகவே அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாயா?"

"அவளைக் கல்யாணம் செய்து கொண்டால் என் குடும்பம் முழுகியா போய் விடும்? போடா முட்டாள்" என்றேன் நான்.

ஒருநாள் நாணுவய்யர் என்னிடம் வந்து, "என் ஸார்? இந்த ஊர் சங்கீத சபா காரியதரிசி உங்களுக்கு ரொம்ப வேண்டியவராமே குஸுமாவுக்கு ஒரு

[65-ம் பக்கம் பார்க்க]



சென்சேனையக் கேள்விகள்

"சந்தேகம்" (மாரிக்கும்)

குரல் இரவல் வாங்கும் வழக்கம் முதன் முதலாகத் தமிழ்ப் பட உலகில் எப்பொழுது ஆரம்பமாயிற்று? அப்படி இரவல் வாங்கப்பட்ட முதல் தமிழ்ப் படம் எது? இரவல் கொடுத்தவர் யார்? இரவல் வாங்கப்பட்டது யாருக்கு?

எனக்குத் தெரிந்த வரையில் ராயல் டாக்கீஸார் தயாரித்த "சக்குபாயி"ல் டி. எஸ். கிருஷ்ணவேணிக்கு வி. ஆர். தனத்தின் குரல் இரவல் வாங்கப்பட்டதுதான் முதல் சம்பவம் என்று நினைக்கிறேன். அதற்கு முன்பே இவ்வழக்கம் ஆரம்பமாகி விட்டதோ என்னவோ—என்றால் நிச்சயமாய் கூற முடியவில்லை.

கே. எஸ். சொக்கலிங்கம் (பம்பாய்)

வேலைக்காரி போன்ற சீர்திருத்தப் படங்களை ஒருபுறம்வெளியிடும்போது, ஜனு, மீரா போன்ற பக்திப் படங்களை வெளியிடுவது சரியா? சிறு வயதிலேயே பெண்கள் பக்தியில் ஈடுபட்டு, வாழ்க்கையை வெறுப்பதாகக் காட்டப்படுவதை நம் சிறு பெண்கள் பின்பற்றினால் ஆண்களின் கதி என்ன ஆவது?

நாம் சிறுவர் சிறுமியர் படத்தில் பார்ப்பதை வாழ்க்கையில் பின்பற்ற முற்பட்டுவிடுவார்கள்என்று நீர்கூறுவதானால், அவர்கள் "வேலைக்காரி"யைப் பார்த்துவிட்டு, பொய்ச் சத்தியம் செய்யவும், வாங்கின கடனைக் கொடுக்காமலிருக்கவும், பிறருடைய சொத்தை வஞ்சகமாய்அபகரித்துக் கொள்ளவும், கோர்ட்டாரை ஏமாற்றவும் அல்லவோ கற்றுக்கொண்டு விடுவார்கள்! இதை உண்மையில் சீர்திருத்தம் என்று சொல்லுகிறீர் நீர்?

கி. அ. இராஜு (சிங்கா நல்லூர்)

சென்னையிலுள்ள "சினிமா ரஸிகர் சங்க"த்தின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

சினிமா ரஸிகர் சங்கம், 93. ஹபிபுல்லா தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 5 என்று எழுதும்.

ரா. ஜெயா (புது டில்லி)

ஆதித்தன் கனவில் நடிக்கும் அஞ்சலி தேவியை "அழகி" என்று மிக மிக வர்ணிக்கிறார்களே, ஆனால் அவருக்குக் கொஞ்சம்கூட அழகே யில்லை

நம் நாடு

நல்ல வேளை! அந்த மூக்குக் கண்ணாடியின் சொந்தக்காரர் இங்கில்லை!

"மாயாவதி"யின் மலர்ந்த சிரிப்பிற்கு அந்த தாடிப் பெரியார் அடிமையாகிவிட்டார் போலிருக்கிறது! கணபதி பிக்சர்ஸ் "மாயாவதி"யில் ஒரு காட்சி.

என்று நான் கூறுகிறேன். உம் அபிப்பிராயம் என்ன?

தாராளமாய்க் கூறும்; நான் ஆட்சேபிக்கவில்லை. ஆண்களைக் கவரும் "அஞ்சலியின் அழகு" பெண்களைக் கவரவில்லையென்றால் அதற்கு யார் என்ன செய்வது!

சற்குணம் (மேட்டுப் பாளையம்)

தன் மனைவியைப் பிறன் மனைவியாக நடிக்க அனுமதிப்பது பெருத்த முட்டாள்தனம் அல்லவா?

தன் கணவருக்கு "முட்டாள் பட்டம்" ஏற்பட்டுவிடக் கூடாதென்ற எண்ணத்தால்தான் போலும்—அநேக நடிகைகள் தங்கள் கணவரைத் தனியே விட்டுவிட்டுச் சினிமாவுக்கு வந்திருக்கிறார்கள்!

சி. எம். முகையதீன் (தென்காசி)

பவளக்கொடியில் கிருஷ்ணன் "அன்னம் வாங்கலையோ" என்று பாடிக் கொண்டே விற்கிறார். ஆனால், பவளக்கொடி அதை விலைக்குக் கொடுக்கும்படி கேட்கும்போது ஏன் கிருஷ்ணன் மறுக்கிறார்?

பவளக்கொடி பாடிக்கொண்டே விலைக்குக் கேட்காததால் இருக்கலாம்

பி. பேச்சிமுத்து (ஸ்ரீவில்லிபுத்தூர்)

சினிமாப் படங்களுக்குக் கதை, வசனம் எழுதுவதன் மூலம் கிடைக்கும் பணத்தை அண்ணாத்துரை தம் கட்சி முன்னேற்றத்திற்காகச் செலவழிக்கிறாரா?

அவர் அப்படிச் செய்தால் 'ஹிந்தி எதிர்ப்பு வீரர்களி'ன் வயிறு நிரம்பும். ஆனால், அவருக்குச் சொந்தமாக ஒரு வயிறு இருக்கிறதே; அதற்கு என்ன செய்வது!

எம். கோவிந்தசாமி (சிங்கப்பூர்)

தாய் நாடு என்ற படத்தில் நடித்த டி. எஸ். மணியும், சுந்தரியும் அதே

போல மற்றும் சில படங்களில் நடிப்பார்களா?

அவர்களுக்கு நடிக்க இஷ்டந்தான், ஆனால் மேன்மேலும் நஷ்டம் அடைய விரும்பாமல் அந்த 'நாயகம்' சித்ரகலா ஸ்டுடியோவை 'அநியாயமாய்' மூடிவிட்டுப் போய்விட்டாரே, ஐயா!

பி. டி. ஜோஸப் (கொழும்பு)

டி. ஏ. மதுரம் முதன் முதலில் நடித்த படம் எது?

"ரத்னவளி."

எல். பொன்னப்பன் (கொல்லம்)

ஸி டே ட ல் ஞானசௌந்தரியில் ராஜம்மாவுக்குக் குரல் தந்திருப்பது யார் என்று கேட்டிருந்தேன். அநேக மாதங்களாகியும் நீர் ஏன் பதிலே தரவில்லை?

"பி. ஏ. பெரியநாயகி" என்று நான் ஒருமுறை எழுதியிருப்பது போதாதா என்ன?

சுப. அழகப்பன்,
(குருவிக் கொண்டான்பட்டி)

"குண்டூசி"க்கு நிகரான இரண்டு பத்திரிகைகள் யாவை?

இரண்டு பத்திரிகைகளா? ஒன்றுகூட இல்லையே!

வி. பக்கிரிசாமி (மைசூர்)

குமாரி ருக்மணி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

தம் தாயார் மீது வீடு சம்பந்தமாக ஒரு வழக்கை நடத்தி வருகிறார்!

ஏ. மைக்கேல் (தூத்துக்குடி)

பி. எஸ். கோவிந்தன் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

புத்துயிர் பெற்றுள்ள மாடர்ன் பிக்சர்ஸாரின் "மஞ்சுளா" படத்தில் அவர் விரைவில் நடிப்பார்.

ஜே. எஸ். கண்ணன்,
(உளுந்தூர் பேட்டை)

மாடர்ன் தியேட்டர்ஸாரின் "வெறும் கோயில்" படம் எந்த நிலையில் இருக்கிறது?

அவர்கள் இந்தக் கதையைத் தயாரிக்கும் எண்ணத்தையே விட்டுவிட்டனர்.

பெ. வீரண்ணத் தேவர்
(பிட்டிகல, இலங்கை)

குமாரி கமலாவுக்கு தாய் தந்தையர் இருக்கின்றனரா?

இருக்கின்றனர்.

எஸ். அப்துல்லா,
(உளுந்தூர் பேட்டை)

டி. பிரேமாவதி தற்போது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

ஜுபிடரின் "கிருஷ்ண விஜய"த்தில் அவரைச் சந்திக்கலாம்.

ஆர். சக்கரபாணி (பொள்ளாச்சி)

நல்லதம்பி படத்தில், நல்லதம்பி தென்னை மரத்தில் ஏறியிருப்பதைக் காட்டுகிறார்கள். பிறகு அவர் எங்கே போகிறார்; வருகிறார் என்பது காட்டப்படவில்லை. அடுத்தாற்போல் அவர் சைக்கிளில் வருகிறார். அவருக்கு சைக்கிள் எங்கிருந்து கிடைத்தது?

என்னய்யா நீர் கற்பனைக்கு இடமேயில்லாமல் செய்துவிட வேண்டுமென்கிறீரே! தென்னைமரத்தின் உச்சியை அடைந்த நல்ல தம்பி அப்படியே இந்திரலோகத்திற்குச் சென்று இந்திரனின் சைக்கிளை இரவல் வாங்கிக்

விரைவில் வெளிவரப் போகும் "மாயாவதி" தமிழ்ப் படத்தில் மஹாலிங்கம் இந்தக் கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

கொண்டு வந்திருக்க முடியாதா; சொல்லும்?

ஷேக் தாவுத் (தொண்டாமுத்தூர்)

மதன மாலாவில் நடித்த ஸ்ரீராம் என்பவரும், நவஜீவனத்தில் நடிக்கும் ஸ்ரீராமன் என்பவரும் ஒரே நபர் தானா?

ஆம்; ஒருவரேதான். ஸ்ரீராமுக்கு நம்பர் ஜோஸியத்தில் மிகுந்த நம்பிக்கை உண்டு. தம் பெயரிலுள்ள எழுத்துக்களை மூன்றிலிருந்து நான்காகஆக்கிக் கொள்ளுவதற்காக தம் பெயரை "ஸ்ரீராமன்" என்று இப்பொழுது மாற்றிக் கொண்டிருக்கிறாராம்!

கே. எஸ். கே. போத்தி (திருச்சி)

எம். கே. டி. பாகவதர், எஸ். டி. சுப்புலக்ஷ்மியுடன் நடித்த முதல் படம் எது?

பாகவதர் எஸ். டி. எஸ். ஸுடன் முதன் முதலாக நடித்த படம்''பவளக் கொடி.'' அவரது முதல் படமும் அதுவே.

அந்த அறிக்கை இல்லாவிட்டால்கூட வழிப்போக்கர்கள் இந்த இடத்தில் தங்க விரும்புவார்களே! (கன்னியின் காதலி)

நல்லதம்பி (ராஜபாளையம்)

எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி இவர்களது சொந்த ஊர் எது? தற்போது எந்தப் படத்தில் நடிக்கின்றனர்?

அவர்களை "மருத நாட்டு இளவரசி" படத்தில் சந்திக்கலாம். சொந்த ஊர் கொல்லங்கோடை அடுத்த வடவனூர்.

ப. மாரப்பன் (பழனி)

எம். கே. டி. பாகவதர் நடிக்கும் அமர கவி என்னவாயிற்று?

தயாரித்தாலல்லவா ஏதாவது ஆவதற்கு?

என். ஜி. ராஜமாணிக்கம்,
(நாமக்கல்)

என். எஸ். கே. நல்லதம்பியில் ஓட்டுகிறாரே—அது மோட்டாரா அல்லது மோட்டார் சைக்கிளா?

அதைக் 'கோவேறு கழுதை' என்று நான் கூறுவது வழக்கம். ஏனென்றால் அதன் தோற்றம் ஒரு விளையாட்டுமோட்டாரைப் போல் இருக்கிறது. ஆனால் அது போடும் சத்தமோ மோட்டார் சைக்கிளைப் போல இருக்கிறது. அதன் உண்மைப் பெயர் 'மோட்டாரெட்' என்பது. அதாவது 'குட்டி மோட்டார்' என்பது பொருள்.

ஏ. ஆர். ஸ்வாமி,
(பீளமேடு, கோவை)

கிருஷ்ண பக்தியில் நாரதராக நடிக்கும் ஸி. எஸ். ஜெயராமன், ஸ்ரீவள்ளியில் நாரதராக நடித்த நாகர் கோவில் மஹாதேவன் இவ்விருவருள் நாரதர் வேஷத்தை நடிப்பதில் யாருக்கு முதல் ஸ்தானம் அளிக்கலாம்?

எனக்கென்னவோ தோன்றுகிறது, நாரதர் வேஷத்தை மஹாதேவனைத் தவிர வேறு எவராலும் அவ்வளவு நன்றாக நடிக்க முடியாது என்று.

சினிமாப் பிரியன்,
(நெல்லாய், கொச்சி)

சமீபத்தில், விபத்திற்குள்ளான டி. எஸ். சரோஜாவுக்குப் பல் உடைந்து

ஜுபிடர் பிக்சர்ஸார் சீக்கிரமே வெளியிடப்போகும் "கன்னியின் காதலி"யில் காமெடியன் சாரங்கபாணி, புளிமூட்டை ராமஸ்வாமி இவர்களின் தோற்றமே ஹாஸ்யமாய் இருக்கிறது. நடிப்பைப் பற்றி கேட்கவும் வேண்டுமோ?

விட்டதாக நீங்கள் வெளியிட்டிருந்தீர்களே? குணமாகி விட்டதா? இனி அவர் படங்களில் நடிப்பாரா?

சென்னையில் தெருவுக்கு இரண்டு 'பல் தச்சர்கள்' இருக்கும் போது உமக்கேனய்யா இந்தக் கவலை? அவர் மீண்டும் படங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார்.

ரஹீம் அஜ்மல் (கம்பம்)

என் கணவர் படத்திற்குப் பின் எஸ். பாலசந்தர் எந்தப் படத்தை டைரெக்ட் செய்கிறார்?

பாலசந்தர் டைரெக்ஷன் கற்றுக்கொள்ளுவதற்காக நம் பட முதலாளிகள் மீண்டும் மீண்டும் தங்கள் தனத்தை விரயம் செய்து கொண்டிருப்பது சாத்தியப்படுமா சொல்லும்?

காந்த ஊசி (நெல்லிக்குப்பம்)

ஸ்ரீ ஆண்டாளில் யூ. ஆர். ஜீவரத்தினம் சுவடியில் எழுத்தாணியால் எழுதுகிறார். அது ஆணியால் ஓலையைக் குத்துவது போலவே தோன்றுகிறது. அவருக்கு எழுத்தாணியால் எழுதத் தெரியாது என்று நான் யூகிக்கிறேன். சரிதானா?

அவர் எழுத்தாணியை அதற்குமுன்னால் பார்த்திருக்கக்கூட மாட்டார் என்று கூறியிருந்தால்கூட பொருத்தமாகவே இருந்திருக்கும்.

எம். ஏ. சலாம் (சிந்தாமணிப்பட்டி)

டி. ஆர். ராஜகுமாரிக்கு நான் இரு முறை கடிதங்கள் எழுதினேன். அத்துடன், என் விலாசமிட்ட தபால் கவர், ஒரு லெட்டர் பேப்பர் இவைகளையும் வைத்தனுப்பினேன். ஆனால் இது வரை பதிலே வரவில்லை. காரணம் என்ன?

நல்லவேளை! உமக்கு பதில் வந்திருந்தால்தான் நான் ஆச்சரியத்தில் மூழ்கிப் போயிருப்பேன். ஏககாலத்தில் இரண்டு மூன்று பட முதலாளிகள் போட்டியிட்டுக் கொண்டு அவர்களை சேலத்திற்கும், சென்னைக்கும், கோவை

முத்தூருக்குமாக இழுத்தடிப்பதால் அவர்களுக்கு அவகாசம் ஏது? ஆதலால், இனிமேல் நீர், "காசைக் கறியாயடிக்காமல் ஸ்டாம்பாக" மாற்றி வரும் வேலையை விட்டுவிடுவதுதான் நல்லது.

சுந்தரம் (மதுரை)

ஹிந்தி எதிர்ப்புத் தலைவரான ஸி. என். அண்ணாத்துரை, வழக்கில் வாதாட ஒரு வட நாட்டு வக்கீலைப் புகுத்தியது சரியா?

சரிதான். அந்தப் படத்திலும் மறைமுகமாக ஹிந்தி எதிர்ப்பைக் காட்டியிருக்கிறாரே; உமக்குத் தெரியவில்லையா? அந்த வட நாட்டு (ஹிந்தி) வக்கீலை "எதிர்த்து" ஒரு தமிழ்நாட்டு வக்கீல் வாதாடுவதைக் கவனியும்!

டி. பி. ஆர். (மட்டுநகர்)

சினிமா நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வர்ணனைகளை எழுதுவது போல் வானத்திலுள்ள நக்ஷத்திரங்களைப் பற்றியும் நீர் எழுத முடியுமா?

தாராளமாய் எழுதுவேன். அவைகளை முதலில் நம் சினிமாப் படங்களில் நடிக்கச் செய்யும்!

ஸி. எஸ். டி. சிங், வீரப்பா இவர்களிடையே "பருந்தாட்டு இளவரசி"யைப் பற்றி முக்கியமான பேச்சு நடக்கிறது.

கே. ஸி. மீனாக்ஷி சுந்தரம்,
(கொல்லங்கோடு)

எம். வி. ராஜம்மா, பாபநாசம் சிவன் இவ் விருவருடைய விலாஸங்களையும் தெரிவிக்கவும்.

(1) எம். வி. ராஜம்மா, கிருஷ்ணராவ் தெரு, பித்தாபுரநகர், தேனாம்பேட்டை, சென்னை. (2) பாபநாசம் சிவன், ஸ்ரீனிவாஸபுரம், மந்தவெளி, மைலாப்பூர், சென்னை.

என். ஏ. நடராஜன் (மலாயா)

போஜன் படத்தில் விஷப் பாலைக் குடித்து ஒரு பூனை இறந்து விடுகிறதே அந்தப் பூனை யாருடையது?

சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ள அநேக "ருத்ராக்ஷப் பூனைகளை"ப் பற்றியெல்லாம் எழுதுகிறேனே; ஆதலால் இந்தப் பூனையின் பூர்வோத்திரமும் எனக்குத் தெரிந்திருக்குமென்று கேட்டிருக்கிறீர்; சரிதானே?

வி. ஆர். கோபாலகிருஷ்ணன்
(மலாயா)

வி. என். ஜானகி நடித்த முதல் படம் எது?

ஜானகி முதன் முதலில் "சந்திரஹாஸா" தெலுங்குப் படத்தில் நடித்தார். அவர் நடித்த முதல் தமிழ்ப் படம் "மும்மணிகள்." அவர் முதன் முதலாக சினிமா உலகில் பிரவேசித்து நடனம் மட்டும் ஆடிய படம் "கிருஷ்ணன் தூது."

ஈ. கிருஷ்ணன் குட்டி,
(கொல்லங்கோடு)

நீர் எப்பொழுதாவது, எந்த நடிகையுடனாவது அபிப்பிராய பேதப்பட்டது உண்டா?

"படங்களில் அவையவங்களை அதிகமாகக் காட்டி, அதன் மூலம் புகழ் அடைய முயலுவது 'கலை விபசாரம்' ஆகும்" என்று நான் தவமணியுடன் ஒருமுறை வாதித்துப் பார்த்தேன். ஆனால் அவர் இதற்குப் பேதமான அபிப்பிராயத்துடன் "வன மோஹினி"யில் தோன்றியிருக்கிறாரல்லவா?

ஏ. எம். இப்ராஹீம் (மலாயா)

தமிழ்ப் படங்களில் முஸ்லீம்களுக்கு ஏன் அதிகமாய் இடம் அளிக்கப் படவில்லை. அப்படியே அளிக்கப்



"நம் நாடு" தமிழ்ப் படத்தில் ஒரு அபாயகரமான கப்பல் காட்சி இது.

பட்டாலும், அவர்களுக்குப் பிரதம பாகங்கள் அளிக்கப் படாததேன்?

முஸ்லீம்களுக்கு அளிக்கக்கூடாது என்ற கொள்கை என்னவோ நம் பட முதலாளிகளுக்குக் கிடையாது. முஸ்லீம்கள் அதிகமாக நடிக்க முற்படாததுதான் இதற்குக் காரணம். அப்படி முற்பட்டுள்ள சிலருக்கோ கதாநாயகனாய் நடிப்பதற்கான யோக்யதாம்சங்கள் இல்லை.

"தலைப்பா ஊசி" (ஆம்பூர்)

எம். எம். தண்டபாணி தேசிகர் படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டாரா?

இல்லையில்லை. அவர் நடித்த படங்கள் தாம் வெளிவராமல் நின்று விட்டன!

பி. செல்லையா (தைப்பிங், மலாயா)

குண்டுசியாரே! நீர் படித்த பள்ளிக்கூடம் எது?

அவினாசியிலுள்ள ஹையர் எலிமென்டரி பள்ளிக்கூடத்திலும், பிறகு கோயமுத்தூரிலுள்ள சர்க்கார் கல்லூரியிலும் நான் படித்துமுடித்தேன். மூன்ருவது வகுப்பை அடைவதற்குள் நான் முப்பது எலிமென்டரி பள்ளிக்கூடங்களாவது மாறியிருப்பேன். அந்த ஜாபிதா எனக்கே ஞாபகமில்லை!

எம். சித்தி முஹம்மது (கிள்ளான், மலாயா)

'கவலையைத் தீர்ப்பது நாட்டியக் கலையே' என்று பாகவதர் முன்பு பாடி யிருக்கிருர். ஆனல் நாட்டியக் கலை எனக்குப் புதிய கவலையைத் தான் ஏற்படுத்தி யிருக்கிறது. என் கவலையைத் தீர்க்க உம்மால் முடியுமா?

முடியவே முடியாது! பேசாமல் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளும். 'கவலை' தானுகத் தீர்ந்துவிடும்!

ஜெக்கரியா (கம்பார்)

போஜனில் வரலக்ஷ்மி பாடுவது சொந்தக் குரலிலா?

ஆம்; சொந்தக் குரலில்தான்.

ஆர். குணசேகரன் (மதுரை)

"தன் குற்றம் தனக்குத் தெரியாது" என்பதற் கிணங்க கிராம சுகாதார சங்கம் வைத்து நடத்தும் நல்லதம்பி கோஷ்டியார், தங்கள் கிராமத்தில் உள்ள குடி தண்ணீர் கிணற்றைச் சுற்றி மேடை அமைக்காததும், கிணற்றருகில் துணி தோய்ப்பதை தடுக்காததும் தவறுகள் தாமே?

தவறுகள்தாம்.

டி. கே. வெங்கடேசன், (தாடிக் கொம்பு)

ஏ. எஸ். ஏ. சாமியின் விலாஸத்தைத் தெரிவிக்க முடியுமா?

முடியும். c/o ஸென்ட்ரல் ஸ்டுடியோ கோயமுத்தூர்—என்று எழுதும்.

பி. எம். மாஜிதீன் (கொழும்பு)

டி. ஆர். ராஜகுமாரியின்போட்டோ ஒன்று எனக்கு வேண்டும். அவருக்கு எழுதினல் அனுப்புவாரா?

மாட்டார். தம் போட்டோக்களிடம் தமக்குள்ள 'சொந்தத்தை' அவர் லேசில் விட்டுக் கொடுக்கக்கூடியவர் அல்ல என்பது உமக்குத் தெரியாது என நினைக்கிறேன்.

எம். அமனுல்லாகான் ஜௌஹரி,
(ஈரோடு)

சினிமாவுக்கு கதை எழுதுவதெப்படி? அதைப் படமாக்குவதற்கு என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டும்?

முதலில் கந்தசாமி கோயிலுக்குச் சென்று, அங்குள்ள பழைய புஸ்தகக் கடைகளில் பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை, மதன காமராஜன் கதை, பாரிசுக் கதைகள், புலந்திரன் களவு மாலை இதுபோன்ற பழங்காலப் புஸ்தகங்கள் சிலவற்றை வாங்கிக் கொண்டு வாரும். சினிமாவில் இது வரை வராத கதை உம் கைக்குக் கிடைத்துவிட்டதோ நீர் உடனே கதாசிரியர்தான்! சமூகக் கதாசிரியர் ஆக வேண்டுமானால் இதுகூட அவசியமில்லை. மனதிற்குத் தோன்றுவதையெல்லாம் எழுதும். ஆனால் உம் கதையில் காதல், ஹாஸ்யம், நாட்டியம், பாட்டு ,தேசியக் கொடி, மஹாத்மா காந்தி, பாரதி பாட்டு இவைகளுக்கெல்லாம் கட்டாயம் இடம் இருக்க வேண்டும்; தெரிந்ததா?

கே. என். எம். நாகூர்,
(கிள்ளான், மலாயா)

சினிமாவில் நடிப்புக் கலையில் ஈடுபட்டுள்ளவர்களை, 'நக்ஷத்திரம்' என அழைப்பதற்குப் பதில் "சந்திரன்" என்றழைத்தா லென்ன?

அதிக காலம் பிரகாசிக்காமல் மின்னி மறைவதால் "நக்ஷத்திரம்" என்று அழைப்பதே மிகமிகப் பொருந்தும்!

ஜே. பிரான்ஸிஸ் பெர்னாண்டோ,
(கொழும்பு)

வசுந்தரா தேவியின் புத்திரியான வைஜயந்தியும் சினிமாவில் நடிக்கப் போகிறாராமே? உண்மையாகவா?

ஜூபிடர் பிக்சர்ஸார் இரண்டு படங்களுக்கு அவரை ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

வி. சுப்பையா (தைப்பிங், மலாயா)

மோஹினியில் பாலசுப்ரமண்யம் பறக்கும் குதிரையைத் தயாரித்துக் கொடுக்கிறாரே? அது போல் அவர் எனக்கு ஒரு பறக்கும் குதிரையைத் தயாரித்துக் கொடுப்பாரா?

அவரிடம் போவீரானால், "குதிரைக்கு விலையாக ஒரு 'மோஹினி' தர வேண்டும்" என்பாரே! ஜாக்கிரதை! உமக்குப் 'பறக்கும்' குதிரை தானே வேண்டும்? நான் தருகிறேன். எங்கள் ஊர் சாயபுவின் ஜட்கா குதிரை, கொள்ளுக்கு என்ன பறப்பு 'பறக்கிறது' தெரியுமா!

எஸ். ஐ. டி. ஐ. (காலி, இலங்கை)

என் கணவர் படத்தில் நடிக்கும் வி. செல்லத்தை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன். வரதக்ஷிணை என்ன கொடுப்பார்?

செல்லம் ஹாஸ்ய நடிகர் கே. ஸ்ரீநிவாஸனை முன்பே மணந்து கொண்டு விட்டார். ஆதலால் இந்த எண்ணத்தை உடனே விட்டுவிடும்.

ஏகாம்பரம் (காஞ்சிபுரம்)

சாவித்திரி படத்தில் நடித்த சாந்தா ஆப்தே விவாஹம் செய்து கொண்டு விட்டாரா? எனின், யாரை?

தனக்கு வாய்க்க வேண்டிய கணவன் இன்னின்ன மாதிரியாய் இருக்கவேண்டும் என்பதை முன்பு பத்திரிகைகளில் வெளியிட்டார். உடனே அநேக 'அசடுக'ள் அப்ளிகேஷன் போட்டன! இதை யெல்லாம் பார்த்தபின் அவருக்கு திருமணமே வேண்டாம் என்று தோன்றியிருக்கக் கூடும்!

என், ஜி. ராமமூர்த்தி (புனா)

குண்டுசியாரே! எல்லோரது வாழ்க்கை வர்ணனைகளையும் எழுதுகிறீரே. உம் வாழ்க்கை வர்ணனையையும் எழுதினால் என்ன?

நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வர்ணனையை லக்ஷக்கணக்கானவர்கள் படிக்க ஆவலாயிருக்கிறார்கள். நான் ஒரு நக்ஷத்திரமல்ல என்பதை மறந்துவிட்டீரே?

ஐ. ஹரிராம கிருஷ்ணன்,
(கன்னியாகுமரி)

தற்காலிக சினிமா நாகரீகம் கலப்பு மணத்தை ஆதரிக்குமா?

என்ன இப்படி கேட்கிறீர்களே! சினிமாவில் ஈடுபட்டுள்ளவர்கள் கலப்பு மணத்தை ஆதரிப்பதாக வெறுமனே சொல்லிக் கொண்டிருக்காமல் காரியத்தில் அல்லவோ காட்டிக் கொண்டு வருகிறார்கள்.

சாந்தாராம் தமிழ்ப்படுத்தி வெளியிட்டிருக்கும் "நம் நாடு" படத்தில் கதாநாயகியாக நடிக்கும் புஷ்பா ஹன்ஸ்.

பிரபல ராம்நாத்-சேகர் தயாரிப்பான "கன்னியின் காதலி"யில் மாதுரி தேவி இரு வேஷங்களில் நடிக்கிறார்.

மோஹினியில் மிகப் புகழ் பெற்ற
மாதுரிதேவி "கன்னியின் காதலி"
யில் அதிகப் புகழ் பெறுவாராம்.


நம் நாடு


கன்னியின்
காதலி

காமெடியன் கே. ஸ்ரீனிவாஸனுக்கு "கனகாங்கி" படத்தில் சிரிப்பதற்கும் சிரிக்கவைப்பதற்கும் நிறைய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதாம்.

"என் கணவர்" படத்தில் திறம்பட நடித்த வி. செல்லம் "கனகாங்கி"யில் மேலும் புகழக்கூடியபடி நடித்திருப்பதாகக் கேள்வி.

சென்னையில் வெளிவந்துள்ள " நம் நாடு " தமிழ்ப் படத்தில் பாரதமாதா விடுதலை நடனத்தையும் காணலாம்.

✶ நிதி வேண்டும்

பட உலகிலே புகழ்பெற்ற புராணப் படங்கள் பல, கலை உலகிலே காதல் ஓவியப் படங்கள் சில, தன் தாய் நாட்டின் பெருமையையும், தாய்மொழியையும் வளர்க்கும் படங்கள் பல. இப்படியாகப் பல படங்கள் அடிக்கடி வெளி வருகின்றன.

நான் ஒரு ஏழை குமாஸ்தா. எனக்கு மாதம் 35 ரூபாய் சம்பளம். எனக்கு ஒரு பெண்ணும், ஒரு பிள்ளையும் இருக்கின்றனர். என் மனைவிக்குப் புராணப் படங்கள் என்றால் உயிர். என் மகளுக்கு சமூகப் படங்கள் பிரியம். மகனுக்கு சீர்திருத்தப் படங்களின் மீது மோகம். ஆகக் கூடி படம் பார்க்கப் போவதானால் குடும்பத்துடன்தான் போக வேண்டும். ஆனால் தற்கால சினிமா கட்டணமோ குறைந்தது நான்கணாவாக இருக்கிறது. ஒரு முறை சினிமா போய் வருவதானால் குடும்பத்திற்கு இரண்டு ரூபாயாவது செலவாகும். மாதத்தில் இப்படி நான்கு அல்லது ஐந்து முறை சினிமா பார்க்க நேரிடுகிறது. பணம் செலவாகிறதே என்று சினிமாவுக்குப் போக வேண்டாமென்றாலோ இவர்கள் அறியாமையிலிருந்து விடுபட முடியாது. ஒவ்வொருவரையும் நல்ல அறிவாளிகளாக ஆக்க வேண்டும். அதனால் நாட்டுக்குப் பலன் உண்டு. அப்படிச் செய்யாவிட்டால் நாட்டுக்கும், குடும்பத்திற்கும் நான் துரோகம் செய்தவனாகிறேன். என்னைப் போன்று இன்னும் எத்தனையோ குடும்பங்கள் இம்மாதிரி தர்ம சங்கடத்தில் இருக்கின்றன.

இதற்குச் சர்க்கார் ஒரு வழி செய்ய வேண்டும். அல்லது பட முதலாளிகளோ, பணக்காரர்களோ உதவி செய்ய வேண்டும். அதாவது, சினிமா கட்டணத்தை இப்பொழுதிருப்பதில் நாலில் ஒன்றாகக் குறைக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்கள் சினிமாப் பசியைப் போக்க எங்களுக்கு நிதி உதவ வேண்டும். இப்படிச் செய்தால்தான் நாங்கள் அடிக்கடி சினிமாப் பார்க்க முடியும்.

ச. சீனிவாசன், தஞ்சாவூர்.

இதுதான் சட்டமா?

சட்டம் ஓர் இருட்டறை. இது எவ்வளவு நியாயமான வாதம் என்பதை நான் இந்த மாதத்தில் நிதரிசனமாகக் கண்டேன். சென்ற மாதம் இவ்வூர் வெலிங்டன் டாக்கீசுக்கு ஒரு ஹிந்திப் படத்தைக் காண மாலை காக்ஷிக்குச் சென்றேன். திரைக்கு ஒரு புறத்திலே ஒரு பெரிய போர்டிலே கொட்டை எழுத்துக்களிலே, சினிமா முதலிய பொது இடங்களில் பீடி, சிகரெட், சுருட்டு முதலியவை பிடிக்கக் கூடாதென்ற சென்னை சர்க்காரின் தடை உத்தரவைப் பொறித்து வைத்திருந்தார்கள். நான் மிக மகிழ்ச்சியுடன் காட்சியைக் காணத் தயாரானேன். ஆனால் கண்டது என்ன! மூன்றாம் மணி அடித்து படம் திரையிடப்பட்டதும் தியேட்டர் முழுவதும் ஒரே புகை மயமாகி மூச்சுத் திணற ஆரம்பித்துவிட்டது. தியேட்டர்காரர்கள் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்டத்தை அமுல் நடத்த முடியாதவர்கள் பெருமைக்காக போர்டைப் போடுவதில் என்ன பிரயோஜனம்? அதைவிட பேசாமல் இருந்திருக்கலாம்.

காவேரிநாதன்,
திருச்சி.

அமைதி வேண்டும்

நம் ஊர்களிலுள்ள சில பட மாளிகைகளில் நடைபெறும் சம்பவங்களை எவ்விதம் விவரிப்பதென்றே தெரியவில்லை. சினிமா பார்க்கும் போது ஒரு நகைச்சுவைக் கட்டம் வந்துவிட்டால் சிலர் பட மாளிகையே வெடிக்கும்படி கூச்சலிடுவார்கள், கைகொட்டி, பெரியதொனி

யிற் சிரிப்பர், பக்கத்தில் இருப்பவர்கள் மீதும் சாய்ந்துவிடுவர். ஏது, இப்படிச் செய்யாவிடில் படத்தை ரஸிக்க முடியாதா? தலைவனும் தலைவியும் சந்திக்கும் கட்டம் வந்துவிட்டால் கேட்பானேன். அப்பெண்ணின் அவயவங்களை வர்ணிப்பதில் ஈடுபடுவார்கள் சிலர். இப்படியான சம்பவங்கள் நடப்பதால் மற்றவர்கள் படத்தை ரஸிக்க முடிவதில்லை. படமாளிகை ஏவலாளர்களோ அல்லது சொந்தக்காரரோ என்ன செய்யலாம்? சுதந்திர நாட்டில் வசிக்கும் நாம் இவ்வித மனப்பான்மைகளையும் நடத்தைகளையும் வைத்திருந்தால் எவ்விதம் முன்னேற முடியும்?

ஏ. கே. செட்டியாரவர்கள் தம் புத்தகம் ஒன்றில் ஜப்பானிலுள்ள படமாளிகைகளைப் பற்றி குறிப்பிடும்போது "மக்கள் அனைவரும் அமைதியாகவே இருந்து படம் பார்ப்பார்கள்" என்று சொல்லுகின்றார். நம் நாட்டு மக்கள் இதை உணர வேண்டும். இனிமேலாவது சமூகத்துக்கேற்ற சீர்திருத்தம் நிறைந்த பழக்க வழக்கங்களை நாம் கடைபிடித்து நடக்காவிடில் உலகத்துடன் ஒத்து வாழ முடியாது.

உ. நடேசன், கொழும்பு.

சர்க்கார் கவனிக்குமா?

சென்னை அரசாங்கம் தற்சமயம் பல நூதன சட்டங்களை சினிமாத் தொழிலுக்கென்று கொண்டுவர முயற்சிக்கிறது. ஆனால் தற்பொழுது சில மோசக்கார கம்பெனிகள் கிளம்பி இருக்கின்றன. அதைத் தொலைக்க சர்க்கார் இன்னும் முன் வரவில்லை. "நடிக நடிகைகள் தேவை. விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்" என்று விளம்பரப்படுத்துகிறார்கள். சினிமாவில் சேர ஆர்வமுள்ளவர்கள் உடனே கவரை வாங்கி, சேர்வதற்கு வேண்டிய கடிதத்தை எழுதி, கவரினுள் 2 அணா ஸ்டாம்பு வைத்து அனுப்பி விடுகிறார்கள். அதற்குப் பதில், ஒரு கத்தை அப்ளிகேஷனை அனுப்பி விடுகிறார்கள். இதைக் கண்ட ரஸிகர்கள், "நமக்குப் பதில் வந்து விட்டது. இனி நாம் நிச்சயமாக சினிமாவில் ஓர் நடிகனாகச் சேர்ந்துவிடலாம்" என்று எண்ணுகிறார்கள். அந்த அப்ளிகேஷனோவென்றால் இல்லாத அர்த்தமற்ற பல கேள்விகளைக் கொண்டுள்ளது. அத்துடன் ரூ. 6-12-0 உடனே அனுப்பினால் நடிகனாகச் சேர்த்துக் கொள்ளுகிறேன் என்றும் எழுதி விடுகிறார்கள். ரஸிகர்களும் ரூ. 6-12-0

குடந்தையில் பிரசித்திபெற்ற காட்சிசாலை

ஒரு முறை
நேரில் விஜயம்
செய்யுங்கள்
*
உங்கள் மனதிற்கு
இன்பத்தைக்
கொடுக்கக் கூடிய

பம்பாய் தேவி தயாள்
கம்பெனியார் தயார் செய்யும்
"ஸ்டேரிரைட்"
பாத்திரங்களும்

சிறந்த R. C. A.
ரேடியோக்களும்.
பீட்டர்பேன் பாட்டரி செட்
ரேடியோக்களும்

எங்களிடம் உள்ளன.

MUHIL.

R. D. S. ராஜன் அண்டு சன்ஸ்
136, பெரியதெரு . . . . கும்பகோணம்

"லைலா மஜ்னு" ஷூட்டிங் நடக்கும்போது ஜித்தன் பானர்ஜி மஹாலிங்கத்திடம் ஏதோ தமாஷ் செய்கிறார். இடுப்பில் கை வைத்திருக்கும் டைரெக்டர் நாகூருக்கு சிரிப்பு தாங்கமுடியவில்லை போலிருக்கிறது.

அனுப்பிவிடுகிறார்கள். பிறகு ஒரு பதிலும் வருவதில்லை. கடிதம் எழுதிக் கேட்டால் பதில் போடுவதில்லை. 2 அணா ஸ்டாம்பு அனுப்பச் சொல்லிவிட்டு 1½ அணா ஸ்டாம்பை ஏப்பம் விடுவதல்லாமல், ரூபாய் 6-12-0 பணத்தையும் ஏப்பம் விட்டு விடுகிறார்கள். இது போல் பல ரஸிகர்கள் அனுப்புவதால் அவர்களுக்கு ஏராளமான பணம் சேர்ந்ததும் அவர்கள் எங்கேயாவது ஓடிவிடுகிறார்கள். இதுபோன்ற மோசக்காரக் கம்பெனிகளை ஒழிக்க சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறேன்.

வி. நாராயணசாமி,

தஞ்சை.

ஓர் வேண்டுகோள்

சில பட முதலாளிகள் பணம் அதிகமாக சம்பாதிப்பதற்காக, ஆபாசமான படங்களையும், கலகத்தையும் அமைதியின்மையும் மக்களிடையே ஏற்படுத்தக் கூடிய படங்களையும் எடுத்து வருகிறார்கள். இது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும்.

நமது நாட்டிற்கு, கல்வி சம்பந்தமான படங்களும், கடவுள் பக்தியை ஊட்டும் படங்களும், நாட்டில் எல்லா வகுப்பினரும் ஒற்றுமைப்பட்டு, காந்தி மஹான் கற்பித்த அஹிம்சையைப் பின் பற்றுவதற்கு ஏதுவான படங்களுமே தேவையாகும். நம் நாட்டை சீர்திருத்துவதில், படமெடுப்பவர்களுக்கும் ஓர் பொறுப்புண்டு என்று நினைத்து, அதற்கு ஏற்றவாறு படமெடுப்பார்களாக!

ஆர். தக்ஷிணாமூர்த்தி,

சேலம்.

கடவுளுக்கு அவமானம்!

நமது நாடு தற்போது தொழில் துறையில் முன்னேறி வருகிறது. அதிலும் சினிமாத் தொழில் மிகமிக அபிவிருத்தி அடைந்து வருகிறது. மதுவரக்கன் ஒழிந்தாலும் ஒழிந்தான், இந்த சினிமா சொக்கனுக்கு ஒரு சான்ஸ்! குடிக்கும் நேரத்தையும், பணத்தையும் இன்று நம் மாகாணத்தில் அநேகம் பேர் இவனைக் கண்டு களிக்கின்றனர். ஆனால் இந்தப் படமுதலாளிகள் ஏராளமான பணத்தைக் கொட்டிக் கவிழ்த்து, ஒருவர் எடுத்த படத்தையே மாறி மாறி திருநாமங்களை மாற்றி எடுக்கும் பித்து தமிழ் நாட்டிலே அதிகமாக இருந்துவருகிறது. நமது புராணங்களையும் இறைவனின் பெருமையையும் நசுக்கி வருகிறார்கள். நாஸ்திகம் ஓங்கி, "கடவுள் இல்லை, கல்லைக் கும்பிடாதீர்" என வாதாடிக் கொண்டிருக்கும் ஒரு சாரார் பெருகி வரும் இந்நாளில் திரைப் படங்களில் நமது கடவுளை இந்தமாதிரி இழிவு பண்ணுவது எவ்வளவு பேதமை.

ஆணும் பெண்ணுமாய், சக்தியும் சிவனுமாய், அழியாத ஜோதியாய் இருக்கின்ற நம் கடவுளை பட முதலாளிகள் சிறிதும் பொருத்தமற்ற நடிகர்களுக்கு அவ்வேஷத்தைக் கொடுத்து, ஆண், பெண் கூச்சம் என்பது கொஞ்சமுமின்றி கொஞ்சிக் குலவி, கண்ட கண்ட

விதமான காதல் லீலைகளைபுரியச்செய்து, நமது கடவுளையும் காமுகன் என பொது ஜனங்களிடை காட்டுகிறார்கள். இந்து மத தர்மம் நெடுநாளாய்பிழைத்திருக்கிறதே என்ற பொருமையாலா படத்தில் நமது கடவுள்களை இப்படி அல்லல் படுத்துகிறார்கள்? இறைவனிடம் மாறாது அன்புகொண்டு அவனை வழிபடும் சினிமா நடிகர்களாவது இவ்வித ஆபாசக் காட்சிகளில் நடிக்காமல் இருக்கக் கூடாதா? இதனை தடை செய்து ஜனங்களுக்கு புத்துணர்ச்சி எழுப்பும் வண்ணம், சமூகப் படங்களையும், முறை வழுவாது தமிழ்ப் புராணப் படங்களையும் எடுக்குமாறு சர்க்கார் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டும். இதைச் சர்க்கார் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அ. அருணாசலம்,
செங்கோட்டை.

துப்பறியும் கதைகள்

நம் தமிழ்ப்படமுதலாளிகள் அநேகமாக புராணப் படங்களையே எடுத்து வருவது மிகவும் விசனிக்கத்தக்க விஷயம். அதுவும், வள்ளி, ஹரிச்சந்திரா, பவளக்கொடி போன்ற படங்களை, நம் முதலாளிகள் திரும்பத்திரும்ப எடுக்கின்றார்கள். கதாசிரியர்களும் நம் தமிழ் நாட்டில் மிக அதிகமாக இருக்கின்றார்கள். மிக அழகிய கதைகளும் அநேகம் இருக்கின்றன. பல துப்பறியும் நாவல்கள் நம் நாட்டில் இருக்கின்றன. பலவற்றை நான் பல முறை படித்திருந்த போதிலும் இன்னும் எனக்குத் திகட்டவில்லை. அந்தமாதிரி ரஸம் பொருந்திய துப்பறியும் கதைகளை நம் பட முதலாளிகள் படமெடுத்தால் நலமாக இருக்கும்.

கமலா திருமலை,
இராமநாதபுரம்.

நடிப்பு இதுதானா?

தமிழ்ப்பட நடிகர்களில் சிலர் சம்பாஷணையைச் சொல்லும் போது உடம்பை அலட்டிக் கொண்டும், பல்லைக் கடித்துக் கொண்டும் தலையை அதிகமாக ஆட்டிக் கொண்டும் இருக்கிறார்கள். இதை அவர்கள் நடிப்பு என்று எண்ணியிருக்கிறார்களோ என்னவோ! நல்ல நடிப்பு என்பது சம்பாஷணையின் தன்மை அறிந்து, சம்பவத்தை உணர்ந்து அதன்படி முகபாவங்களை மாற்றுவதும், அங்கங்களை அசைப்பதுமே ஆகும். அப்படி

ரூ. 300 இனாம்

★

இந்த மஹாகாளி இயந்திரத் தகட்டை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கைவசம் வைத்திருந்தால் நீங்கள் நினைத்தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்களுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ அது உங்களைத் தேடிவரும். இந்தத் தகட்டை கைவசம் வைத்துக் கொண்டு தியானம் பண்ணும்போது இந்த மஹாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய்வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1-4-0. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ 3-2-0. உடனே பலன் தெரியக்கூடிய யங்கிரத் தகடு ஒன்று தனி- சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 300 இனாம்.

THE BENGAL MESMERISM HOUSE (G.M.M.)
JULLUNDER City.

யின்றி மேலே கூறியுள்ளது போல் செய்தால் நடிகர்களுக்குத்தான் கஷ்டம். மற்றபடி அவர்கள் நடிப்பதாக யாரும் சொல்லமாட்டார்கள்

இனியாவது நடிகர்கள் தங்கள் தவறை உணர்ந்து நன்கு நடிப்பார்கள் என்று நம்புகிறேன்.

பொ. வீராசாமி,
மலாயா.

சமூகப் படங்களில் ஆடைகள்

சமூகப் படங்கள் என்றால் "சூட்" "ஹாட்"டுடன் கதாநாயகன் கட்டாயம் தோன்ற வேண்டும்; டெலிபோனும் கார்களும் அவசியமாக இருக்க வேண்டுமென்று முடிவு கட்டப்படுகிறது. சமூகம் என்பது, தமிழில் வந்துள்ள சமூகப் படங்களைப் பொறுத்த வரையில் "சூட்" "ஹாட்டு"டன் திரியும் இளைஞர்களையும், "பஞ்சாபி" உடையும் "ஹாண்ட்" பாக்கும் தலைமயிர் அலங்கார விநோதங்களும் கொண்ட பெண்களையும் தான் கொண்டிருக்கிறதென்று நம் பட முதலாளிகள் கருதுகிறார்கள். நம்நாட்டு உடைகள் இருக்க ஏனோ இந்த மேல் நாட்டு உடைகளைப் போட்டு சமூகப் படங்களைப் பாழ்படுத்துகிறார்கள். நம் நாட்டின் பண்பு, ஆடை ஆபரணங்கள், நாகரீகம் முதலியவைகளைக் கொண்டு தயாரிக்கும் படங்களே நமக்கு நன்மை தரும். அல்லாமல் இப்படி அலங்கோலமாகச் செய்வதால் யாதொரு பயனும் கொடுக்காது. ஆகையால் இனிமேலாவது நம் பட முதலாளிகள் இந்த ஆடை விஷயங்களை கவனிப்பார்களா?

வி. கோவிந்தராஜுலு,
திருக்கோயிலூர்.

'பரிசு பெற்ற கடிதம்
★
எழுதியவர் :
ச. சீனுவாசன்
கீழவாசல்,
ஒட்டக்காரத் தெரு,
தஞ்சாவூர்.

அபிபபிராயம் மாறுமா?

"ஆங்கிலப் படங்களைக் கண்டு விட்டு தம்ம படங்களைக் காணும்போது, இவர்கள் எதற்காகப் படங்களைத் தயாரிக்கிறார்கள் எனத் தோன்றுகிறது" என்று என் நண்பர் ஒருவர் அடிக்கடி சொல்லுகிறார். இப்படி ஹாலிவுட் படங்கள்தாம் சிறந்தவை; மற்றவை மட்டம் என்று கூறுபவர்கள் நம் நாட்டில் ஏராளமாயிருக்கிறார்கள். நமது படித்த வாலிபர்களிடையே இத்தகைய கருத்து ஆழமாய் வேரூன்றியிருக்கிறது. 'நான் தமிழ்ப் படங்களையே பார்ப்பது கிடையாது' என்று கூறுவது ஒரு யோக்ய தாம்சம் என நினைக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பிரிட்டிஷ் பிலிம் தொழிலைச் சேர்ந்த மிஸ்டர் டெய்ண்டன் என்பவரின் அபிப்பிராயத்தைக் கேட்ட பிறகு என்ன சொல்லுவார்களோ தெரியவில்லை. அவர் கூறுகிறார்: "நான் முதன் முதலாகப் பார்த்த ஒரு இந்தியப் படமே என்னை மெய் சிலிர்க்கச் செய்தது. அதில் காணும் அபார டைரெக்ஷன், அற்புத ஷாட்கள் என்னை பிரமிக்கச் செய்து விட்டன."

இந்தியப் படங்களில் நடிகர்களின் இயற்கை நடிப்பு நம்மை பரவசமூட்டுகிறது. அவர்களது நடிப்பு நம்பும்படியாகவும், சுலபமாயுமுள்ளது.

இந்தியப் படங்களுக்கு வெற்றியளிப்பது அதில் காணப்படும் காதல் காட்சிகளின் கவர்ச்சியும், அழகுமேயாகும். கவிதா ரஸம் பொருந்திய வசனங்கள், செவிக்கினிய கீதங்கள், நடன முத்திரைகள் போன்ற சைகைகள் ஆகிய காட்சிகள் காதல் கட்டங்களில் சித்தரிக்கப்படுகின்றன. முத்தம் கொடுத்து கட்டி அணைக்கும்காட்சிகளைக் காட்டினும், இம்முறை விரசமின்றி சிறந்ததாகத் தோன்றுகிறது. பொதுவாகத் தமிழ்ப் படங்களில் சில உயரிய டெக்னிக், சிறந்த நடிப்பு, இவைகளுடன் காணப்படுகின்றன.

நான் பல பாஷைப் படங்களைப் பார்க்கிறேன். எந்த அம்சத்திலும் இந்தியப் படங்கள் மட்டமானதல்ல என்றே எனக்குத் தோன்றுகிறது. அதிலும் தமிழ்ப் படங்கள் மற்ற பாஷைப் படங்களுக்கு சமமாகவோ அன்றி உயர்ந்ததாகவோ தான் காணப்படுகின்றன. அவைகள் தமிழ்ப் படங்கள் என்பதினால் தான் மட்டம் என்ற ஒருதலை அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது.

ஆகையால், இனியாவது அத்தகைய ஒருதலைப்பட்ட அபிப்பிராயத்தை உடையவர்கள், தற்போது திரையில் ஓடும் சில தமிழ்ப் படங்களைக் கண்ட பிறகாவது தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்வார்களா?

தி. சா. ராமமூர்த்தி,
தாத்தையங்கார் பேட்டை.

சினிமா நேசன் போட்டி 2

முதல் பரிசு ரூ. 25

1 தப்புள்ள விடைக்கு ரூ. 10

முடிவு தேதி 30—8—49

(1) சதி × × × ×
(2) கிருஷ்ண × × ×
(3) × × × தாஸ்
(4) × × × × கொடி
(5) × × × பூமி

நிபந்தனைகள்

1. விடைகளை தாள்களில் எழுதி எத்தனை விடைகளேனும் அனுப்பலாம்.

2. பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு 4 அணா. (ஸ்டாம்புகளாக அனுப்பலாம்.)

3. இப் போட்டியில் இதுவரை வெளி வந்துள்ள தமிழ் சினிமாப் படங்களின் பெயர்களையே சேர்க்கப்படும்.

4. குறி போட்டுள்ள இடங்களில் ஒவ்வொரு எழுத்து மட்டும் எழுதி நிரப்பி அனுப்ப வேண்டும். குறிப்பாக முதல் குறிப்பில் உள்ள சதி ×××× என்பதற்கு 4 எழுத்துக்கள் குறைகின்றன. இதுவரை வெளிவந்துள்ள படங்களின் பெயர்களை ஞாபகப்படுத்தி, 4 எழுத்துக்களை எழுதி நிரப்பி விடலாம்.

5. ஆசிரியரின் விடை சீல் செய்யப் பட்டுள்ளது.

6. ஆசிரியரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியாக உள்ள விடைக்கு முதல் பரிசும், ஒரு தப்புள்ள விடைக்கு இரண்டாம் பரிசும் கொடுக்கப்படும்.

7. ஒன்றுக்கு மேற்பட்டவிடைகள் பரிசுக்குறியதாக தெரிவு செய்யப் பட்டால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

8. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள், பிரவேசக்கட்டணம் அனுப்ப வேண்டிய விலாசம்:—

சினிமா நேசன் ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 483,
கொழும்பு.

நீங்கள் வாசித்தீர்களா?

சுதந்திரஜோதி ...... 2·4·0
காதல் சுவை ததும்பும் சமூக சீர்திருத்த நாவல்

ராஜாஜியின் உவமைகள் .. 1·0·0
ராஜாஜியின் அற்புதமான உவமைகள் அடங்கியது

அமுதகீதம் .... 1·0·0
பல பத்திரிகைகள் புகழ்ந்து கூறும் சிறந்த சிறுகதைகள்

பொன் வண்டு .... 0·4·0
சிறுவர்களுக்கான சிறந்த கதைப் புத்தகம்

லெனின் .... 1·0·0
வாழ்க்கையில் நடந்த சில கதைகள்

புதுமுறை வெளியீடு சென்னை, 17.

ஏஜெண்டு கமிஷன் 25%

நீங்கள் படித்தீர்களா ?

பிரபல ஆசிரியர்
"லால்ஜி"
எழுதிய

பறக்கும் குதிரை

(அதியற்புதமான கதை)

விலை அணா 3

முன்பணமாக அனுப்பும் ஏஜண்டுகளுக்கு $33\frac{1}{3}\%$ கமிஷன் தரப்படும். தனிப் புத்தகம் வேண்டுவோர் 4 அணாக்களுக்கு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பாப்பா பதிப்பகம்,
43, நாகப்பய்யர் தெரு,
சென்னை 5.

புஸ்தகப் பொழுது

தூங்காதே தமிழா.

[எழுதியவர் "ஆயன்." வெளியிடுவோர் இன்ப நிலையம், 43, பாளையப்பன் தெரு, எழுமூர், சென்னை விலை அணா பதினான்கு.]

'ஆயன்' எழுதிய இந்த 'தூங்காதே தமிழா' ஒரு அற்புத பொக்கிஷம். தற்காலம் தமிழ் நாட்டில் உள்ள பல கட்சிகளும், அதன் மூலம் செய்யப்படும் பல பிரசாரங்களும் நாட்டினை எவ்வளவு கீழ் நிலைக்குக் கொண்டு வந்து விடும்; நாடு நாஸ்திகத்தில் ஆழ்ந்து எப்படித் தத்தளிக்கும் என்பதை நன்கு எடுத்துக் காட்டி யிருக்கிறார் ஆசிரியர். 'ஆயன்' கூறியது போலத் தமிழன் ஆராய்ந்து எதையும் செய்யாமல், சொன்னதற்கெல்லாம் தலையாட்டி, கை கொட்டுவானாகில் அவன் நிலை அவ்வளவுதான். ஆகையால் ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்து எது நமக்கு நன்மை பயக்குமோ, எதனால் நம் நாடு முன்னேற்றமடையுமோ அக்கட்சியைக் கைக்கொள்ள வேண்டும். மற்றவைகளைத் துச்சமெனத் தள்ள வேண்டும்.

'தூங்காதே தமிழா' தமிழரின் கரங்களில் மட்டுமன்றி, தமிழ் தெரிந்த ஒவ்வொருவர் கைகளிலும் இருந்து, அதை அவர்கள் தூங்காமல் படித்து அதன்படி நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வளவு அருமையான புத்தகத்தின் விலையை கொஞ்சம் குறைத்திருக்கலாம். மேலும் அச்சுப் பிழை, புள்ளிப் பிழைகளுடன், சில இடங்களில் கரடான சொல்லும் காணப்படுகிறது. இதை மறுபதிப்பில் திருத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

வெரைட்டி

[மாதம் இருமுறை. ஆசிரியர் பி. வின்ஸெண்ட். விலாசம்: வெரைட்டி காரியாலயம். கோயமுத்தூர். தனிப் பிரதி விலை அணா 4.]

இது ஒரு சினிமாப் பத்திரிகை. சினிமாச் சம்பந்தமான செய்திகளும், படங்களும், சிறுகதை தொடர் கதையும் இதில் இருக்கிறது. ஆனால் பத்திரிகையைப் பாதி ஆங்கிலத்திலும், பாதி தமிழிலும் வெளியிட்டிருப்பது என்னவோ போலிருக்கிறது. இதை ஏதாவது ஒரு பாஷையில் வெளியிட்டால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

முருகன்

[மாதப் பத்திரிகை. ஆசிரியர் ஆர். எம். எஸ். மணியம். விலாஸம்: 4011. தெற்கு மூன்றாவது தெரு, புதுக்கோட்டை. தனிப் பிரதி எட்டு அணா.]

கதை, கட்டுரை, கவிதை, ஹாஸ்யத் துணுக்குகள், கேலிச் சித்திரங்களுடன் சினிமாச் செய்தியும் இதில் இருக்கிறது. வெள்ளிபோல் மின்னும் அட்டைஒன்றே பொது ஜனங்களை வசீகரித்து விடும் என்று சொல்ல வேண்டும்.

கிடைக்கப் பெற்றோம்

"காரைக்குடி ஸ்ரீ கொப்புடையம்மாள் மகத்துவக் கும்மி." ஆக்கியோன், கே. எஸ். கருப்பையா. கிடைக்குமிடம்: பாரதி பிக்சர் பாலெஸ், காரைக்குடி. விலை அணா ஒன்று.

ஜமீன்தார் மகன்

ஆசிரியர். "ராஜன்:" வெளியிட்டோர், ஜில் ஜில் பதிப்பகம், ஜி. டி. சென்னை. 1 விலை அணா மூன்று.

சந்திர ஒளி

குழந்தைகளின் மாதம் இருமுறை பத்திரிகை. ஆசிரியர்: "சாமி." விலாஸம்: 'சந்திரஒளி' நிலையம், சென்னை 7. தனிப்பிரதி விலை அணா ஒன்று.

கும்பகோணம் 'ராதா ஸில்க் எம்போரிய'த்தின் சொந்தக்காரர் ஸ்ரீ. ஆர். கே. திருவேங்கடம் செட்டியாரின் புத்திரன் கோவிந்தராஜுலுவுக்கும் விஜயலக்ஷ்மிக்கும் ஜூன் 30௳ திருமணம் நடந்தேறியது.

உங்களதிர்ஷ்டத்தில் எழுதி இருப்பதென்ன?

நீங்கள் ஒரு வருஷத்திற்குள் நடக்கும் சுபா சுபங்களை அறிந்துகொள்ள வேண்டுமெனில், இன்றே ஒரு கார்டில் உங்களுடைய விலாசம், ஒரு புஷ்பத்தின் பெயர் எழுதியனுப்புங்கள். நாங்கள் ஜோதிஷ சாஸ்திர கணிதப்படி உங்களுக்கு உண்டாகும் லாபநஷ்டங்கள், எந்த வியாபாரத்தால் லாபம் கிடைக்கும், எங்ஙனம் பொருள் சேரும், உத்தியோகம் எப்போது கிடைக்கும், வேலை ஆட்களுடைய அபிவிருத்தி, தம்பதிகளுடைய சௌக்கியம், ஆரோக்கியம், வியாதி, தூரப் பிரயாணங்கள், வியாஜ்ஜியம் அல்லது பரீக்ஷைகளில் தேர்ச்சி, கல்யாணம், பூமி அல்லது ஆஸ்தியினால் சுகம், புதிய நட்பு, உங்கள் கார்டு சேர்ந்தவுடனே மாதவாரி பலனும் வருட பலனும் ரூ. 1-4-0க்கு தபாலில் *V.P.*யில் அனுப்புகிறோம். தபாற் செலவு வேறு; துரதிர்ஷ்டத்தை அதிர்ஷ்டமாக்கிக் கொள்ளவும் வழியுண்டு; எழுதி அனுப்புகிறோம். இதனால் வரப்போகும் கஷ்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ஒரு முறை பரீக்ஷித்தாலே தெரியும். உங்கள் ஜாதக பலன்களின் திண்மையை தப்பென்று ருஜூ செய்தால் கட்டிய பணம் வாபிஸ்செய்யப்படும்.

SHRI SWAMI SATNARAIN JOTISH ASHRAM

(G.D.M.) JULLUNDER CITY.

அழகிய நீடித்த சுருள் கேசத்திற்கு

ஹாலிவுட் ஹேர் கர்லிங் லோஷன் உபயோகியுங்கள்

இதன் பெயரிலிருந்து ஊகிப்பதைப் போன்றே இந்த கர்லிங் லோஷன் உங்கள் கேசத்தை பலவந்தமாகச் சுருளச் செய்கிறது. ஹானியற்றது என்பதற்கு உத்தரவாதம். தலையை வாரிவிட்டுக் கொள்வதாலும், ஸ்நானம் செய்வதாலும், மழையினாலும் பாதிக்கப் படாதது. இதை உபயோகித்த மூன்று தினங்களுக்குள் நல்ல பலன் அளிக்கிறது. ஒரு வார உபயோகத்தில் நிரந்தரமான சுருள் அலைகளை அளிக்கிறது. ஸினிமா நக்ஷத்திரங்கள் முதல், பள்ளி மாணாக்கர்கள் வரை அனைவராலும் விரும்பிப் போற்றப்படும் விபரம், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் தினே தினே எங்களுக்கு வந்து குவியும் ஏராளமான புகழுரைக் கடிதங்களின் மூலம் நிரூபிக்கப் பட்டு விட்டது. ஒரு பாட்டில் விலை ரூ. 2-8-0. போஸ்டேஜ் தனி. ஒரே சமயம் 3 பாட்டில்களுக்கு ஆர்டர் செய்தால் போஸ்டேஜ் இனாம்.

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

THE AMRIT PHARMACY (G. M. M.) JULLUNDUR CITY.

ஊசிப்பல்

சென்ற மாத ஊசியில், சினிமாத் தொழிலில் ஏற்பட்டுள்ள மந்த நிலைமையின் காரணமாக, அத் துறையில் சம்பந்தப்பட்டிருந்த சில பிரமுகர்கள், ஜீவனத்திற்காக வேறு பல தொழில்களில் பிரவேசித்திருப்பதை எடுத்துக் காட்டி யிருந்தேன். அதன் பிறகு நம் சென்னை சர்க்காரின் மனப்பான்மை இத் தொழிலைப் பொருத்தவரை மேலும் கடினமாகி யிருப்பது வருந்தத் தக்கது.

• • •

"ஓடுகிற மாட்டை விரட்டினால் அது கீழே படுத்துவிடும்" என்ற ரீதியில், ஏற்கனவே பல தினுசான வரிச் சுமைகளை சமாளித்து நிற்கிறது சினிமாத் தொழில். 'சினிமாக் காட்சிகளுக்கு வரி' என்ற புதிய சுமையை படத் தொழிலின் மீது சுமத்தி யிருப்பது நிலைமையை இன்னும் மோசமாக்குவதாக இருக்கிறது. சர்க்காரின் போக்கு 'சித்தம் போக்கு, சிவம் போக்கு' என்ற ரீதியிலேயே போய்க் கொண்டிருந்தால் நம் மாகாணத்திலே சினிமாத் தொழிலே பூண்டோடு நசித்து விடவும் கூடும்.

• • •

நம் மாகாணத்தில் சினிமாத் தொழில் அடியோடு நசித்து விடுகிறது என்றே வைத்துக் கொள்வோம். (அப்படி ஆகிவிடக் கூடாது என்பதுதான் என் பிரார்த்தனை!) அப்படி நேர்ந்து விட்டால் இத் தொழிலில் ஈடுபட்டுள்ள பலரும் என்ன செய்வார்கள்? இத் துறையில் பணியாற்றி வரும் சில பிரமுகர்கள் வேறு என்னென்ன தொழில் செய்யக் கூடும் என்று நான் கற்பனை செய்து பார்த்தேன்.

• • •

என் கற்பனையின் விளைவுதான் பின் கண்டவை. சினிமாவில் பிரவேசிப்பதற்கு முன் அவர்கள் செய்து வந்த தொழிலையும், அவர்களுடைய தற்போதையத் திறமைகளையும் மனதில் கொண்டு ஹாஸ்ய முறையில் இதை எழுதி யிருக்கிறேன் என்பதை முன்கூட்டியே தெரிவித்துவிடுகிறேன்.

• • •

வக்கீல் 'கௌன்' களுக்கு திடீரென்று பிரமாத கிராக்கி ஏற்படக் கூடும். வக்கீல் (பி. எல்.) படிப்புப் படித்து விட்டு, இந்தத் துறையில் பிரவேசித்திருப்பவர்கள் மீண்டும் வக்கீலாக 'பிராக்டிஸ்' ஆரம்பிக்கலாம். கே. சுப்ரமண்யம், ஜோஸப் தளியத் போன்ற டைரெக்டர்களும், என். சீதாராமன் (மிஸ். மாலினி டைரெக்டர்), கே. ராஜாமணி போன்ற நடிகர்களும் இந்த ஜாப்தாவில் சேருவார்கள்.

• • •

நடிகர், டைரெக்டர், எழுத்தாளர் சகலமுமான கொத்தமங்கலம் சுப்பு, பழையபடி செட்டிகடை "கணக்குப் பிள்ளை ஐயா" வாகவே ஆகிவிட வேண்டிய அவசியமில்லை. அவர் இயற்றியுள்ள 'காந்தி மகான் கதை'யை ஊரூராகச் சென்று கதா காலக்ஷேபம் செய்து வந்தாலே போதும். நல்ல வரவேற்பும், வருமானமும் கிடைக்கும்.

கதா காலக்ஷேபம் என்றதும், ஒரே படத்தில் நடித்து முடித்து விட்டு மங்கிப் போயிருக்கும் நக்ஷத்திரமான விஜயகுமாரியின் நினைவு வருகிறது, ஆதியில் கதா காலக்ஷேபத்தின் மூலம் தம் காலக்ஷேபத்தை நடத்தி வந்த விஜயகுமாரி, சில படங்களில் உப பாத்திரங்களில் நடித்து வரும் தம் சகோதரி சுந்தரியையும் தமக்கு உதவியாகக் கொண்டு, பழையபடி அந்தப் புண்ணிய கைங்கரியத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

• • •

அக்காவும், தங்கையும் சேர்ந்து கதா காலக்ஷேபம் செய்யும் விஷயத்தை எழுதும்போது எனக்கு திருச்சூர் சகோதரிகளின் ஞாபகம் ஏற்படுகிறது. திருச்சூர் பிரேமாவதியின் தமக்கையான ருக்மணி(மாஜி சினிமா நடிகை) கதா காலக்ஷேபம் செய்வதில் பிரசித்தியுடன் விளங்கியவர். தங்கை பிரேமாவதியும் காலக்ஷேபம் செய்து வந்திருக்கிறார். ஆகவே இருவரும் மீண்டும் லேடி பாகவதர்களாக மாறி விடலாம்.

• • •

பிரபல ஹாஸ்ய நடிகர் என். எஸ். கிருஷ்ணனிடம், 'கிந்தனார்' "காந்தி மகான் கதை' (வில்லுப் பாட்டு) இவைகள் இருக்கின்றன. அவைகளைக் கொண்டு அவர் ஊர் ஊராகச் சுற்றி வந்தாலே அவரது வாழ்க்கை சுகமாகப் போய்விடும்.

• • •

மாயவரத்தில், தரங்கம்பாடிக்குப் போகும் பஸ் ஸ்டாண்டில் வெற்றிலே பாக்குக் கடை வைத்து 'பிழைப்பு' நடத்தி வந்தார் ஒருவர். அவர் இன்று பல நடிகைகளை ஆட்டி வைக்கும் ஒரு பிரபல நட்டுவனாராக பிரகாசித்து வருகிறாரென்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். அவர் மீண்டும் அதே வியாபாரத்தை ஆரம்பிக்க விரும்பினால் எவ்வளவோ பெரிய நாட்டிய மணிகளெல்லாம் அவருக்கு 'மூல தனம்' கொடுத்து உதவ முன் வருவார்களே! அந்தக் கடையில் வியாபாரமும் ஏராளமாய் நடக்கும்!

• • •

படங்களில் நடிக்க அரை மனதுடன் வந்து புகுந்தவர் ரஞ்சன். படங்களில் நடித்துக் கொண்டே விமானம் ஓட்டக் கற்றுக் கொண்டு, 'ஏ. ஒன்' பைலெட் லைசென்ஸ் பெற்று விட்டார். எந்த நிமிஷமும் அவருக்கு 'ஏர் பைலெட்' வேலை தயாராக இருக்கிறது. இல்லையென்றாலும் அவரைப் பற்றிக் கவலை வேண்டியதில்லை, அவருக்கு அநேக தொழில்கள் தெரியும். சொந்தப் பத்திரிகை வேறு இருக்கவே இருக்கிறது.

• • •

பத்திரிகை என்றதும், பளிச்சென்று எழுத்தாள நடிகரான கே. மஹாதேவனின் ஞாபகம் வருகிறது. நடிகராக இருந்து கொண்டு அடிக்கடி பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்துவரும் கே. மஹாதேவன், நாகர்கோயிலில் போய் உட்கார்ந்து கொண்டு நிம்மதியாகப் பல பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரைகள் எழுதிக்கொண்டிருப்பார்.

• • •

சித்தூர் ஜில்லா போர்டில் ஒரு குமாஸ்தா வேலை காலியானால் அந்த ஸ்தானத்திற்கு நடிகர் வி. நாகய்யா மனுப் போடக் கூடும். ஏற்கனவே வேலை பார்த்தவர் என்ற 'சிபாரிசு' வேறு இருப்பதனால் அது கண்டிப்பாக அவருக்குக் கிடைக்கும்.

• • •

சிறுகளத்தூர் சாமாவைப் பார்த்தவர்கள், வணங்கி வேலை பார்க்கவேண்டிய குமாஸ்தா உத்தியோகத்திற்கு அவர் தகுதியானவர் என்று ஒப்புக்கொள்வது கடினம். ஆனால் ஏற்கனவே அவர் 'தாஸ்மா பாவிடன்' கிளப்பில் வகித்து வந்த உத்தியோகத்தைமீண்டும் பெற்று சுறுசுறுப்பாக வேலை செய்யலாம்.

சர்க்கஸ் கம்பெனியிலிருந்து நடிப்புத் தொழிலுக்கு 'பல்டி' அடித்து வந்தவர் நடிகை பி. எஸ். சரோஜா. மீண்டும் அவர் ஒரு சர்க்கஸ் கம்பெனியில் சேர்ந்தால் ஒரு சர்க்கஸ் ராணியாகத் திகழ்வார். சர்க்கஸ் கம்பெனிக்கும் நிறைய வசூல் கிடைக்கும்.

• • •

கதர் விற்பனைக்கும், படத் தொழிலுக்கும் சம்பந்தம் ஏதாவது உண்டா? கிடையாதுதான். ஆனால் தீவிர தேசீய வாதியாக—கதர் விற்பனையில் மும்முரமாக முனைந்திருந்த டைரெக்டர் வேல்சாமிக் கவி மீண்டும் அதில் பிரவேசித்தால் அது அவருக்குக் கஷ்டமா யிராது.

• • •

ஒரு தேவார பாடசாலைக்கு சினிமா நடிகர் ஒருவர் போதகரானல் நீங்கள் ஆச்சரியப் படுவீர்கள் அல்லவா? அந்த நடிகர் எம். எம். தண்டபாணி தேசிகராக இருந்து விட்டால், உண்மையில் அவரிடம் போய் தேவாரம் படிக்க, என்னைப் போலவே பலர் பிரியப் படுவார்கள் என்பது நிச்சயம்!

• •

டைபிஸ்ட் உத்தியோகம் பார்க்கிறவர்களுக்கு அவசியமாக வேண்டியது பொறுமை. தமது பழைய வேலைக்கே போக வேண்டுமானல், விமர்சகர்கள் மீது சீறி விழும் டைரெக்டர் "முருகதாஸா" எப்படித்தான் சமாளிப்பாரோ தெரியவில்லை!

• •

எந்தப் பள்ளிக்கூடத்திற்காவது ஒரு நல்ல தமிழ்ப் பண்டி

தர் தேவையா? அப்படியானல், பல படங்களுக்குப் பாட்டுகள் எழுதியிருப்பதுடன், நடித்துமுள்ள பாபநாசம் ராஜகோபாலய்யருக்குத் தெரிவியுங்கள். அந்த இடத்திற்குத் தகுதியானவர் அவர். பேஷாக சிபாரிசு செய்யலாம்.

• • •

ஒரு மில் முதலாளிக்கு டெலிபோன் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்ப்பது கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனல் அந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் ஸ்ரீராமன், பழையபடியே டெலிபோன் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்குப் போனல் அது அவருக்கு சுலபமாகவே இருக்கும்.

• • •

நடிப்புத் தொழில் சுகமானதுதான். ஆனல் மீண்டும் தாம் பார்த்து வந்த 'எக்ஸைஸ் இன்ஸ்பெக்டர்' உத்தியோகத்திற்குப் போனல் ஜெமினி நடிகர் கணேசன், அதையும் சுகமாகவே தான் நினைப்பார்.

• • •

'கமர்ஷியல் இன்ஸ்ட்ரக்ட'ராக தம் வாழ்க்கையை ஆரம்பித்தவர்

"கனகாங்கி" தமிழ்ப் படத்தில் கங்காதரன், வி. செல்லம் வி. என். ஜானகி ஆகியோர் தோன்றும் ஒரு காட்சி.

சுகுமார் சுந்தரம். அந்த 'சுகுமார' சுந்தரத்திற்கு சினிமா உலகில் படுதோல்வியே கிடைத்திருப்பதால் அவர் மீண்டும் தம் பழைய தொழிலுக்கே போய்விடலாம்.

• • •

டிராயிங்கில் டிப்ளமோவும், 'ஜிம்னாஷி'யத்தில் சர்டிபிகேட்டும் வாங்கியுள்ள ஒருவர் நடிகராக இருக்கிறார் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? இந்த யோக்கியதாம்சங்களைப் பெற்றுள்ள நடிகர் ஆர். பாலசுப்ரமண்யம், 'டிராயிங் மாஸ்டராக'கவே ஆகிவிடலாம். ஆனால் மீண்டும் எம். கே. மீனலோசனி அவருடைய சிஷ்யை ஆகிவிடவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியாகாது!

• • •

மளிகைக் கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தவர் 'கொட்டாப்புளி' (கே. பி.) ஜெயராமன். ஆகவே அவருக்கு அதிகக் கஷ்டமிராது. அவரே 'ஜெயராம் ப்ரொவிஷன்ஸ் ஸ்டோர்ஸ்' என்று வைத்து விடலாம்.

படங்களில் பூசாரி வேஷத்தில் நடிக்கிறவருக்கு உண்மையில் அந்த வேலை தெரியாது. ஆனால் படத்தில் ஜமீன்தாராகவும், மகாராஜாவாகவும் நடிக்கும் டி. பாலசுப்ரமண்யம் மீண்டும் பிள்ளையார் கோவில் பூசாரியாகி விடலாம்.

• • •

இதையெல்லாம் முன் கூட்டியே அறிந்துதான் போலும், பிரபல நடிகை டி. ஆர். ராஜகுமாரி ஒரு தியேட்டரைக் கட்டிக் கொண்டிருக்கிறார். தியேட்டர் முதலாளினியாகி 'அக்கடா' என்று அவர் சாந்தியுடன் இருந்து விடலாம் அல்லவா?

• • •

"எல்லாம் சரி. நீ என்ன செய்வாய்?" என்று கேட்கிறீர்களா? நியாயமான சந்தேகம். என் பாடும் திண்டாட்டம்தான். அதனால்தான், முன்னாலேயே 'இந்தத் தொழில் அஸ்தமித்து விடக் கூடாது' என்ற என் பிரார்த்தனையைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேனே! முன்னெச்சரிக்கையாக புல்லுக்குப் பதில் மண்ணைத் தின்னவும் பழகி வருகிறேன்!

ரூ. 10,000 இனாம்.

தங்கம் தோலா ஒன்று ரூ 2—8—0

அமெரிக்கன் நியூ கோல்டின் பிராபல்யம்

ஒரு முறை பரீட்சித்தால் எப்பொழுதும் திருப்தி

ஹஸாரிலால் பதன் கோட் எழுதுவது:

"உமது அமெரிக்கன் நியூ கோல்ட் பார்ஸல் கிடைத்தது. எனது நன்றி. இந்த தங்கத்துக்கும் உண்மையான தங்கத்துக்கும் வித்தியாசமே எனக்கு புலனாகவில்லை. மறு தபாலில் தயவுசெய்து எனக்கு 6 தோலா அனுப்புங்கள். மற்ற ஆர்டர்கள் அடுத்து வரும்."

உரைகல் மேல் இந்த தங்கம் உண்மை தங்கத்தின் அடையாளத்தை செய்கிறது. இதை கம்பியாகவும் தகடுகளாகவும் செய்யலாம். இதைக் கொண்டு பலவித ஆபரணங்களும் தயாரிக்கலாம். மிக்க புத்திசாலியான நகை வியாபாரியும் இதை உண்மை தங்கமில்லை என்று கூறுவது அசாத்தியம். மேற்படி சர்டிபிகேட்டை பொய் என்று நிரூபிப்பவருக்கு ரூ. 10,000 இனாம் கொடுக்கப்படும்.

இதை பிரசித்தப்படுத்தவே தோலா விலை ரூ. 2-8-0க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தபால் செலவு பிரத்யேகம். 3 தோலாவுக்கு ரூ. 7. 6 தோலாவுக்கு ரூ. 13. 15 தோலாவுக்கு ரூ 30. 40 தோலாவுக்கு ரூ. 70.

திருப்தியில்லாவிட்டால் பணம் வாபஸ் அனுப்ப உத்தரவாதம்

இலவசம்; மூன்று தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங் இலவசம். ஆறு தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங்கும் தபால் செலவும் இலவசம்.

IMPERIAL COMMERCIAL COMPANY REGD;

(G. D. M.) JULLUNDER CITY.

பி. எஸ். சரோஜா: சூபர் பிக்சர்ஸாரின் இன்பவல்லியில் இவ்விதம் காட்சி அளிக்கிறார்.

13417

ஜூபிடர் பிக்சர்ஸாரின்
கன்னியின் காதலி தமிழ்ப்
படத்தில் அஞ்சலி தேவி.

எம். வி. ராஜம்மா

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

ராவ் இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டு பங்களூருக்குச் சென்றார். அங்கு ராஜம்மா எப்படியோ அவரது கண்களில் பட்டு விட்டார். மாதவ ராவ் அவரை உடனே ஒப்பந்தம் செய்து கொண்டு சென்னைக்கு அழைத்து வந்தார். ராஜம்மாவிடம் சிறந்த நடிப்பின் அறிகுறிகள் இருப்பதைக் கவனித்த அப்படமுதலாளிகள், அவருக்கு 'சரோஜா' என்ற உபபாத்திரத்தை அளிப்பதற்குப்பதில் அவரை படத்தின் கதாநாயகியாகவே நடிக்க வைத்து விட்டனர்.

ராஜம்மா **சம்சார நௌகாவில்** நடித்த பின்னர் மகம்மது பீர் கம்பெனியில் சேர்ந்தது, பிறகு **கிருஷ்ண ஜராஸந்தா, யயாதி** ஆகிய படங்களில் நடித்தது இவற்றை யெல்லாம் பற்றி நான் முன்பே கூறியிருக்கிறேன்.

யயாதியில் சின்னப்பா ராஜம்மாவின் கதாநாயகனை நடித்தார். அடுத்தாற்போல் **உத்தம புத்திரனிலும்** சின்னப்பாவுடன் ராஜம்மா மீண்டும் சேர்ந்து நடித்தார். இந்தப் படத்தில் அவருக்கு நிறைய சந்தர்ப்பங்கள் அளிக்கப் பட்டிருந்தன. அடுத்தபடியாக அவர் டி. கே. எஸ். பிரதர்ஸ் தயாரித்த **குமாஸ்தாவின் பெண்** படத்தில் நடித்தார். அதிலும் அவருக்கு நல்ல வேஷம் அளிக்கப் பட்டிருந்தது. இவ்விரு படங்களும் ராஜம்மாவுக்கு மிகுந்த பாராட்டுதல்களைச் சம்பாதித்துக் கொடுத்தன.

மேற் சொன்ன இரு படங்களும் வெற்றி அடைந்ததற்கு மாறாக ராஜம்மாவின் நடிப்பு அதன் பின் நடித்த இரண்டு படங்களில் தோல்வியாக முடிந்தது. **மதன காமராஜன்** படத்தில் அவருக்கு சாதாரணமான ஒரு உபபாத்திரமே அளிக்கப்பட்டிருந்தது. **அனந்தசயனமோ** சுப்ரமண்யத்தின் படுதோல்வியாய் முடிந்தது.

இந்த தோல்விகளின் விளைவாக ராஜம்மா தமிழ்ப் படங்களின் விஷயத்தில் மனம் சோர்ந்து விட்டார் என்று தோன்றுகிறது. அதனால் தான் போலும் அவர் தமிழ்ப் படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டு, கன்னடப் படங்களில் நடிக்க முற்பட்டார். கெ. சுப்ரமண்யம் தயாரித்த கன்னட **பிரஹலாதா** படத்தில் அவர் கயாதுவாக நடித்தார். அப்படமும் அவருக்கு இழந்த புகழை அளிக்கவில்லை.

1943-ம் வருஷத்தில் ராஜம்மா சொந்தத்திலேயே படம் தயாரிப்பதற்காக ஒரு படக் கம்பெனியை ஆரம்பித்தார். "ஸ்ரீ விஜயா பில்ம்ஸ்" என்ற இக் கம்பெனி **ராதா ரமணா** என்ற கன்னட படத்தைப் பல கஷ்டங்களுக்குப் பிறகு வெளிவிட்டது. இப் படம் கன்னட தேசத்தில் சுமாரான வெற்றியைப் பெற்றது. அதன் பிறகு ராஜம்மா **கலாவதி** என்ற படத்தை தமிழில் எடுக்க முயற்சி செய்தார்.

ஆனல், பிறகு அவர் புத்திசாலித்தனமாக அம் முயற்சியைக் கைவிட்டு விட்டார்.

சொந்தப் படத்தை வெளியிட்டது முதல் அவரது கஷ்டங்களும் ஒருவாருக ஒழிந்து விட்டன. பட உலகிலும் அவருக்கு மெதுவாக கிராக்கி ஏற்படலாயிற்று. சாரதி பில்ம்ஸாரின் **மாயா லோகம்** தெலுங்குப் படத்திலும், கலைவாணி பில்ம்ஸாரின் **அர்த்தநாரி** தமிழ்ப் படத்திலும் அவர் நடித்தார். இவ்விரு படங்களும் அவரைக் கைதூக்கிவிட்டன. இவற்றைத் தொடர்ந்து அவர் **விஜயலக்ஷ்மி** தமிழ் சமூகப் படத்தில் நடித்தார். அப்படம் தோல்வியுற்ற தென்ருலும், ராஜம்மாவின் உழைப்பு பாராட்டத் தக்கபடியே இருந்தது.

“அர்த்தநாரி”யில் எம். எஸ். சரோஜாவும், ராஜம்மாவும்.

இதன் பிறகு ராஜம்மா வாஹினியின் **யோகி வேமன** தெலுங்குப் படத்தில் நடித்தார். மற்றெல்லாப் படங்களையும் விட இதில் அவரது நடிப்பு நன்கு சோபித்திருந்தது. அந்தப் படம் வெளி வந்தது முதல் ராஜம்மாவுக்கு சினிமா உலகில் ஒரு புதிய மௌசு ஏற்பட்டு விட்டது. பிறகு **ஞான சௌந்தரியில்** நடித்தார். அவருக்கு வேஷம் மிகமிகப் பொருந்தியிருந்தது. நடிப்பிலும் நல்ல ‘நகாஸ்’ ஏறியிருந்தது. இப்படத்தின் மூலம் ராஜம்மா ரஸிகர்களின் அபிமான நக்ஷத்திரங்களில் ஒருவராகி விட்டார். ஆனல் அதன்பின் நடித்த **கோகுல தாஸியில்** ராஜம்மாவின் உழைப்பு விணுகி விட்டது.

ரஸிகர்களின் ஆதரவு ராஜம்மாவுக்கு நிறையக் கிடைத்து வருவதைக் கண்ட பட முதலாளிகள் அவரை ஏககாலத்தில் ஒப்பந்தம் செய்து கொள்ள முற்பட்டனர். சமீப காலத்தில் மிக வெற்றி பெற்ற படங்களில் ஒன்றுன **வேலைக்காரியில்** ராஜம்மா நடித்திருக்கிருர். ஆனல் அவருடைய பாத்திரத்திற்கு அக்கதையில் அதிக பிராதான்யம் கொடுக்கப்படவில்லை. ஆகலால் அவருடைய நடிப்பும் சுமாராகவே அமைந்திருக்கிறது.

இப்பொழுது ராஜம்மா **லைலா மஜ்னு, பாரிஜாதம், அம்பிகா தேவி சனிப்ரபாவம்** (தமிழ், தெலுங்கு) ஆகிய படங்களில் நடித்துவருகிருர். **லைலா மஜ்னு**வில் ராஜம்மா மீண்டும் டி. ஆர். மஹாலிங்கத்தின் காதலியாக நடித்து வருகிருர்.

ராஜம்மாவுக்கு சுமாராகப் பாடும் திறமை உண்டு. முந்தின சில படங்களில் அவர் பாடியுமிருக்கிருர். ஆனல் **ஞான சௌந்தரி**யிலோ அவர் வாய் மூலம் நீங்கள் கேட்கும் பாட்டுகள் பி. ஏ. பெரிய நாயகியினுடையவை. ராஜம்மா கேமிராக் கோணங்களுக்கு ஏற்ற நல்ல அழகிய முகத்தைப் பெற்றிருக்கிருர். சந்தர்ப்பம் கிடைத்தால் நன்கு நடிக்கவும் கூடியவர். இப்பொழுதை விட நம் படமுதலாளிகள் பத்து வருஷங்களுக்குமுன்பே அவரைச் சரிவரப் பயன் படுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்பது என் அபிப்பிராயம்.

சுமார் ஐந்தடி உயரமும், நடுத்தரமான பருமனும், சிவந்த மேனியும் கூடிய ராஜம்மா தற்போது தமிழ்ப் பட முன்னணி நக்ஷத்திரங்களில் ஒருவராய் விளங்கி வருகிருர். அவரது ஆரம்பப் படங்களில் தமிழ் சம்பாஷணையில் காணப்பட்ட திருப்தியற்ற உச்சரிப்பும் இப்பொழுது மறைந்து, தமிழை வெகு சுத்தமாகப் பேசுகிருர். எனவே, எதிர்காலத்தில் ராஜம்மாவுக்கு மேலும் அதிக கிராக்கி ஏற்படும் என்றே எனக்குத் தோன்றுகிறது.



துப்பறியும் சாம்பு

"தேவன்" என்ற பெயர் தமிழ்ப் பத்திரிகை வாசகர்களுக்குப் புதியதல்ல. அவர்களுக்கு மிகப் பழக்கமான புனைபெயர் இது. சுமார் இருபது வருஷ காலமாக வாசகர்கள் "தேவனி"ன் கட்டுரைகளையும், சிறு கதைகளையும், தொடர் கதைகளையும் "ஆனந்த விகடன்" பத்திரிகையில் படித்து வந்திருக்கிறார்கள்.

"தேவனி"ன் கதைகளை மக்கள் மிக ரஸிக்கிறார்கள் என்பதனால், அவரால் எழுதப்பட்ட "மைதிலி", "கோமதியின் காதலன்" என்ற கதைகள் முன்பே நாடகமாக மாற்றப்பட்டு மேடைமீது நடிக்கப்பட்டுள்ளன. இந்த நாடகங்களை ரஸிகர்கள் மிகப் பாராட்டி நல்ல ஆதரவு அளித்துள்ளனர்.

இவற்றைத் தொடர்ந்து "துப்பறியும் சாம்பு"வும் மேடைக்கு வரப் போகிறார் என்ற செய்தியைக் கேட்டதும், "துண்டு துண்டாக உள்ள இந்தக் கதையை எப்படித்தான் நாடகமாக நடிக்கப் போகிறார்களோ? அது எவ்வளவு தூரம் ரஸிக்கக் கூடியதாய் இருக்குமோ?"—என்று நான் சந்தேகித்தேன் நான்மட்டுமல்ல; அன்று அந்த நாடகத்திற்குத் தலைமை வகித்த வி ஸி. கோபாலரத்னம்கூட அப்படியேதான் கூறினார்.

ஆனால் சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் "பைன் ஆர்ட்ஸ் கிளப்"(திருவல்லிக்கேணி)பினர் இம்மாதம் 3-ந் தேதி நடித்துக் காட்டிய இந்த நாடகத்தைப் பார்த்தவர்களுக்கு இந்த சந்தேகமெல்லாம் ஆச்சரியமாகவும், சந்தோஷமாகவும் மாறி விட்டது.

நாடகத்தையும், அதை நடித்துக் காட்டியவர்களையும் ஸ்ரீ. கோபாலரத்னம் சில நிமிஷ நேரம் மிகப் புகழ்ந்து பேசினார். இரவு மணி பத்தாகியிருந்தும் அவருடைய பேச்சை அங்கு கூடியிருந்தவர்கள் வெறுக்கவில்லை. இதற்குக் காரணம், அவர் சபையோர் எதிர்பார்த்த அளவு புகழவில்லை என்பதுதான்.

கதாசிரியன் கதா பாத்திரங்களை கற்பனை செய்து சிருஷ்டிக்கிறான். அந்தப் பாத்திரங்களைச் சரிவரப் புரிந்து கொண்டு, நடிகர்கள் திறம்பட நடித்து உயிர்ப்பிக்கும்போது, கதாசிரியனின் திறமை பன்மடங்கு அதிகமாய் சோபிக்கிறது. அக்கதை உண்மையிலேயே மேடை மீது நடக்கிறதோ என்ற சந்தேகங்கூட நமக்கு ஏற்படும். இந்தகைய பிரமையை ஏற்படுத்தியது சாம்பு நாடகம்.

மைலை ரஸிக ரஞ்சனி சபாவில் நான் ஏராளமான நாடகங்கள், நாட்டியங்கள், கச்சேரிகள் ஆகியவைகளைப் பார்த்திருக்கிறேன். புத்திசாலிகளாக உள்ளவர்கள்

[63-ம் பக்கம் பார்க்க]

ஜூபிடரின்

கன்னியின் காதலி

ஸ்வர்ணபுரி மன்னனுக்கு ஆதித்தன் என்ற மகனும், சந்திரிகா என்ற மகளும் இருக்கின்றனர். ஆதித்தனும சந்திரிகாவும் ஆண் பெண்ணாக இருந்தாலும் உருவத்திலும் தோற்றத்திலும் ஒரே மாதிரி இநப்பவர்கள். அவர்களை நெருங்கிப் பழகியவர்கள் கூடச் சட்டென்று யார் என்று கண்டுபிடிக்க முடியாது. துர்ஜயன் என்ற கபட சேனாதிபதியும் அந்த ராஜ்யத்தில் இருந்தான்.

ஒரு சமயம் மன்னன் வெளி தேசம் போயிருந்தான். அப்பொழுது துர்ஜயன் மன்னனின் மக்களை ஒழித்துவிட சூழ்ச்சி செய்கிறான். இதை அறிந்த ஒரு உண்மை ஊழியன் சந்திரிகாவையும், ஆதித்தனையும் அத்தேசத்திலிருந்து வெளியேற்றிக் கடல் மார்க்கமாக வேறு தேசந்திற்குச் செல்கிறான். திடீரென்று தோன்றிய புயல் காற்றின் காரணமாகக் கப்பல் மோதுண்டு உடைபடுகிறது. காற்று, அலை இரண்டின் வேகத்தில் ஆதித்தனும், சந்திரிகாவும் பிரிக்கப்பட்டு கரையில் ஒதுக்கப்படுகின்றனர். சகோதர சகோதரிகள் பிரிக்கப்பட்டாலும் உயிர் தப்புகின்றனர்.

திரைக்கதை

சந்திரிகாவை செம்படவர்கள் கூட்டம் ஒன்று காப்பாற்றுகிறது. அங்கு அவள் தங்கிருக்கும் சமயம் பல இன்னல்கள் ஏற்படுகிறது. அதன் காரணமாக சந்திரிகா அங்கிருந்து தப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது சந்திரிகா உடனே ஒரு தந்திரம் செய்கிறாள். பெண் உடையிலிருந்து-ஆண் வேஷத்திற்கு மாறுகிறாள் இந்த வேஷத்தில் அவன் அங்கிருந்து தப்புவது வெகு சுலபமாக இருந்தது.

ஆண் வேஷத்கில் செம்படவர் கூட்டத்திலிருந்து தப்பிய சந்திரிகா, இரவு பகலாக நடந்து வஸந்தபுரி வந்து சேர்கிறாள்.

வஸந்தபுரி மன்னன் கலைஞர்களை கௌரவிப்பவன். மேலும் அவன் பெயரோ வஸந்த குமாரன். அவனும் கலையில் ரஸிகத் தன்மை கொண்டவன்.

வஸந்தகுமாரனின் குணங்களைக் கேள்விப்பட்ட சந்திரிகா அவன் உதவி கொண்டு தன் அண்ணனையும், தனது ராஜ்யத்தையும் மீட்கலாம் என்று எண்ணுகிறாள். அதற்காகத் தன்னை ஒரு கவி

என்று சொல்லிக் கொண்டு அரசனின் அன்பைப் பெறுகிறாள். ஆஸ்தான பால கவியின் உத்தியோகத்தை ஏற்கிறாள். சந்திரிகாவின் ஆண் வேஷத்திற்கு கலைமணி என்று பெயர் சூட்டிக் கொள்கிறாள்.

சந்திரிகா ஆண் உடையில் கலைமணி என்ற பெயரில் இருந்தாலும், அவளுடைய பெண் உள்ளம் போகவில்லை. அரசன்-வஸந்தகுமாரனுடைய குணாதிசயங்களைக் கண்டு, அவன்மீது மோகங் கொள்கிறாள். ஆனால் தன் நிலையை எப்படி எடுத்துச் சொல்வது என்பதுதான் அவளுக்குத் தீராத பிரச்னையாகி விடுகிறது. அதே சமயம் அவளை மற்றொரு கவலையும் பற்றிக் கொள்கிறது.

வஸந்தகுமாரனும் கலைமணியும் அன்னியோன்னியமாகப் பழகி வந்தனர். ஆதலால் வஸந்தகுமாரன் தன் அந்தரங்கத்தையும் கலைமணியிடம் சொல்கிறான். ஒரு சமயம் வஸந்தகுமாரன் தன் மனதில் வெகு நாட்களாகப் புகைந்து கொண்டிருக்கும் ஒரு ஆவலைப் பூர்த்தி செய்து வைக்கும் பொறுப்பை கலைமணியிடம் ஒப்படைக்கிறாள்.

மன்னனின் ஆசை—அவ்வூரிலிருக்கும் கலாவல்லி என்ற அழகியைத் தனக்கு ஆசைநாயகியாக்கிக் கொள்ள வேண்டுமென்பதே. தான் காதலிக்கும் ஒருவருக்காக, மற்றொரு பெண்ணிடம் தூது செல்ல வேண்டிய தர்ம சங்கடம் கலைமணிக்கு ஏற்படுகிறது. அன்று முதல் கலைமணி தூது செல்லும் வேலையையும் மேற்கொள்கிறாள்.

வஸந்தகுமாரன் காதலிக்கும் கலாவல்லி மேகலாதேவி சிறந்த அழகி அவள் அழகைக் கண்டு ஆண்கள் மட்டுமல்ல பெண்கள் கூட மோகிப்பார்கள். ஆனால் கலாவல்லியோ, என்றும் தான் கன்னியாகவே இருந்து, தன் அழகைக் கட்டிக்காக்க வேண்டும் என்று தீர்மானம் செய்திருந்தாள். அந்தத் தீர்மானம் மற்றவர்களுக்கு விபரீதமாகப் பட்டாலும் அவள் வரை அது சிறந்ததாகப் பட்டது.

வஸந்த குமாரனுக்காக ஆண் வேஷம் பூண்ட சந்திரிகா என்ற கலைமணி, கலாவல்லியை அடைந்து அரசனின் குணாதிசயங்களைப் பற்றியும், அழகைப் பற்றியும் வர்ணிக்

கிறாள். கலாவல்லியிடம் கலைமணியின் உபதேசம் எதுவும் சாயவில்லை. அதற்குப் பதில் கலைமணியின் அழகையும், பேச்சு வன்மையையும் கண்ட கலாவல்லி அவனையே காதலிக்கிறாள்.

நாளடைவில் கலைமணி மீது கலாவல்லியின் காதல் அதிகரிக்கிறது. அவள் கலைமணியை அடைய அரும்பாடு படுகிறாள். கலைமணியோ தான் ஆண் வேஷம் பூண்டதன் காரணமாக இந்த தர்மசங்கட நிலை ஏற்பட்டதே என்று வருத்தமடைகிறாள். இதனால் கலைமணிக்கு பல பிரச்னைகள் எழுகின்றன.

சந்திரிகா என்ற கலைமணிக்குத் தன் அண்ணனை தேடவேண்டிய பொருப்பு ஒரு புறம்; தனது ராஜ்யத்தை மீண்டும் அடைய வேண்டியது மறுபுறம்; இவை எல்லாவற்றிலும், தான் காதலிக்கும் வஸந்தகுமாரனை அடைய வேண்டியது மற்றும் ஒரு புறம்; தன் ஆண்வேஷத்தை இதற்காகக் காப்பாற்றுவது வேறு ஒரு புறப; இப்படியாகப் பிரச்னைகள் பல தோன்றுகின்றன. அதனால் அவள் சவலையுறுகிறாள்.

அதே சமயம் சந்திரிகாவின் சகோதரனான ஆதித்தன் தன் சகோதரியைத் தேடிக்கொண்டு வஸந்தபுரியை அடைகிறான். வஸந்தபுரியின் ஜனங்கள் அவனை கலைமணி என்றே எண்ணுகின்றனர். எல்லோரும் அவனை கலைமணியாகவே பாவித்து க்ஷேமம் விசாரிக்கின்றனர். ஆதித்தனுக்கு இது வியப்பாக இருக்கிறது.

ஆதித்தன் வஸந்தபுரியின் பல தெருக்களின் வழியாகச் சுற்றி கலாவல்லி இருந்த தெருவிற்கு தற்செயலாக வருகிறான். அவன் கலாவல்லியின் மாளிகைக்கு அருகில் வந்த சமயம் எதிர்பாராத சம்பவம் ஒன்று ஏற்படுகிறது. கலாவல்லியின் காதலைப் பெற பல காலமாக முயன்றுவரும் அலங்கார பூபதி, ஆதித்தனை கலைமணி என்று எண்ணி எதிர்க்கிறான். இருவருக்கும் கடும்போர் மூள்கிறது.

அச்சமயம் மாளிகைக்குள்ளிருந்து வெளியே நடப்பதைக் கவனித்து வந்த கலாவல்லி வெளியே வந்து, ஆதித்தனை கலைமணி என்று கருதிக் காப்பாற்றி, உள்ளே அழைத்துச் செல்கிறாள். ஆதித்தனுக்கு உபசரணைகள் பலமாக நடைபெறுகிறது. பலகாலம் பழகியவர்கள் போல் அங்குள்ளவர்கள் ஆதித்தனிட

நடந்து கொள்கின்றனர். கலாவல்லிக்கும், அதுவரை கன்னியைக் காதலித்து வதைப் பெறுவதற்காகக் காத்துக் கொண்டிருந்தவனுக்கும் இப்பொழுது உண்மையிலேயே ஒரு காதலன் கிடைத்து விடுகிறான். ஆனாலும், ஆதித்தனுக்குக் குழப்பம் தீர்ந்தபாடில்லை.

ஆதித்தன் கலாவல்லி வீட்டில் இருப்பதைக் கண்டு அவ்வூரார் கலைமணி என்று தப்பாக எண்ணுகின்றனர். அதனால் அரசன் காதலித்த கலாவல்லியை கலைமணி கவர்ந்துவிட்டதாக அனைவரும் நினைக்கின்றனர். நகரமெங்கும் இதே பேச்சாகவும் இருக்கிறது. இது அரசனின் காது வரை எட்டுகிறது. அவன் உடனே கலைமணியைக் கைது செய்யும்படி கட்டளையிடுகிறான்.

கலாவல்லி தன்னை வெறுத்து, கலைமணியைக் காதலித்ததை எண்ணி வஸந்தகுமாரன் கலங்கிய மனதுடன் உலாவப் போகிறான். அப்பொழுது சந்திரிகா தன் ஆண் உடைகளைக் களைந்து பெண் உடையுடனேயே தன் தனியிடத்தில் உட்கார்ந்து, தனக்கு ஏற்பட்டிருக்கும் தர்மசங்கட நிலையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள். அவ்விடத்தை அடைந்த வஸந்தகுமாரன் சந்திரிகாவின் அழகைக் கண்டு மோகிக்கிறான். சந்திரிகாவின் அழகின் எதிரில் கலாவல்லி அவனுக்கு அப்பொழுது துச்சமாகி விடுகிறது.

வஸந்தகுமாரன் சந்திரிகாவை நெருங்கி விசாரிக்கிறான். சந்திரிகாவுக்கு ஒரு புறம் வஸந்தகுமாரன் தன்னை நெருங்கியிருப்பது சந்தோஷமாக இருந்த போதிலும், அதனால் ஏற்பட்ட தர்மசங்கட நிலையிலிருந்து தப்ப, தான் கலைமணியின் சகோதரி என்று கூறித் தப்பித்துக் கொள்கிறாள்.

கலைமணி என்ற எண்ணத்தில் கைது செய்யப்பட்ட ஆதித்தன் மறுநாள் அரச சபையில் விசாரணைக்குக் கொண்டுவரப்படுகிறான். சபையில் விசாரணை ஆரம்பமாகிறது. திடீரென்று கலாவல்லி அங்கு தோன்றுகிறாள். விஷயம் பூராவும் சபையில் வெளியாகிறது. சபையில் எல்லோரும் அது கேட்டு ஆச்சரியம் அடைகின்றனர்.

பிறகு சந்திரிகா வஸந்தகுமாரனை மணக்கிறாள். ஆதித்தன் கலாவல்லியை மணக்கிறான்.

ஜாமா ஆயில்

எல்லா விதமான வலிகளுக்கும் அற்புத நிவாரணி

மட்டமான போலிகள் பல ஜாமா ஆயிலைப் போல் நடமாடுகின்றன. அதற்காக நாங்கள் பாட்டிலின் மேலேயே "ZAMA OIL" என்ற எழுத்துகளைப் பதித்துள்ளோம். ஆகையால் சகலவிதமான வலிகளுக்கும் சிறந்த அசல் ஜாமா ஆயிலைப் பார்த்து வாங்குவது எளிது.

எல்லா மருந்துக் கடைகளிலும் ஷாப்புகளிலும் கிடைக்கும்

*

அமர்சந்த் ஸோபாசந்த்

கெமிஸ்ட்ஸ் அண்டு டிரக்கிஸ்ட்ஸ்

95(கு) நைனியப்ப நாய்க்கன் தெரு,

மதராஸ்-3.

இச செய்தி

நடிகைக்கு அபராதம்

தியாகராய நகர், சரவண முதலித் தெருவில் தாம் வசித்துவந்த வீட்டைக் காலி செய்த விஷயத்தை, வாடகைக் கண்ட்ரோலருக்குத் தெரிவிக்கத் தவறியதற்காக சினிமா நடிகை கிருஷ்ண வேணிமீது தொடரப்பட்டிருந்த வழக்கில், மாஜிஸ்டிரேட், நடிகைக்கு நானூறு ரூபாய் அபராதம் விதித்தார்.

சினிமாக் காட்சி வரி

சினிமாக் காட்சிகளுக்கு வரி விதிக்க அஸெம்பிளி செய்துள்ள முடிவு ஆகஸ்ட் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வருமாம்.

'வேலைக்காரி' நூறுவது நாள் விழா

ஜூபிடர் வேலைக்காரி படத்தின் நூறுவது நாள் விழா சென்ற மாதம் 26-ம் தேதி சென்னை பாரகனில் கொண்டாடப் பட்டது. இந்த விழாவிற்குத் தலைமை வகித்த, 'தினமணி' ஆசிரியர் ஏ. என். சிவராமன், படத்தில் நாஸ்திகப் பிரசாரம் இல்லை என்று குறிப்பிட்டார். மற்றும் வ. ரா., சின்ன அண்ணாமலை ஆகியோரும் ஆசிரியர் அண்ணாத்துரையின் திறமையைப் புகழ்ந்து பேசினார்கள். முடிவில் அண்ணாத்துரை, டைரெக்டர் ஏ. எஸ். ஏ. சாமி இவர்களுக்கு பரிசு அளிக்கப் பட்டது.

தோழன்

சக்தி நாடக சபையினர், தற்சமயம் திண்டுக்கல் சோலைஹாலில், 'இளமதி'யின் தோழன் நாடகத்தை நடித்து வருகின்றனர். இம்மாதம் முதல் தேதி இந்த நாடகத்திற்கு எம். கே. தியாகராஜ பாகவதர் தலைமை வகித்தார். அவர் நாடகத்தை வெகுவாகப் பாராட்டினார். தாம் சீக்கிரமே நாடகங்களிலும் நடிக்கப் போவதாகக் கூறி சில பாட்டுகள் பாடினார். அன்று விழாவிற்குவிஜயம்செய்திருந்த "நாரதர்" ஆசிரியர் டி. ஸ்ரீநிவாஸ ராவ் நாடகத்தையும், கம்பெனி நிர்வாகி கிருஷ்ண ஸ்வாமியின் சேவையையும் பாராட்டிப் பேசினார். இந்த நாடகம் சீக்கிரமே படமாக்கப் படலாம் என்று தெரிகிறது.

'வடுவூர்' நாவல்கள்

ஜூபிடர் பிக்சர்ஸார், காலஞ்சென்ற பிரபல நாவலாசிரியர் வடுவூர் துரைஸ்வாமி அய்யங்காரின் **காங்கிரஸ் கமலம்** என்ற நாவல், மற்றும் அவரின் வேறு இரு நாவல்கள், ஆகியவற்றைப் படமாக்கும் உரிமைகளை வாங்கியிருக்கிறார்களாம்.

கெயிட்டி திறப்பு விழா

கடந்த சில நாட்களாக பழுது பார்ப்பதற்காக மூடப்பட்டிருந்த சென்னை கெயிட்டி தியேட்டர் பழுது வேலை முடிந்து இம்மாதம் முதல் தேதி மந்திரி கனம் பக்தவத்ஸலத்தால் திறந்து வைக்கப் பட்டது.

யாழ்ப்பாணத்தில்

என். எஸ். கிருஷ்ணன்

சென்ற மாதம் 25-ம் தேதி ஹாஸ்ய நடிகர் என். எஸ். கிருஷ்ணன் தம் கோஷ்டியுடன் இலங்கைக்கு விஜயம் செய்தார். 25-ம் தேதி தம் கோஷ்டியுடன் நகைச்சுவைக் காட்சிகளை ஒரு கல்லூரியின் நிதிக்காகவும், 26-ம் தேதி **இழந்த காதல்** நாடகத்தையும் நடத்தினார்.

பிலிம் சேம்பர் தேர்தல்

சென்ற மாதம் 22-ம் தேதி தென்னிந்திய பிலிம் சேம்பரின், புதிய வரு

ஷத்திற்கான நிர்வாகஸ்தர்களின் தேர்தல் நடைபெற்றது. டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் தலைவராகவும், ஏ. ராமய்யா, சி. பி. சாரதி, மிர்ஸாபூர் ஜமீன்தார், நாராயண அய்யங்கார் ஆகியோர் உப தலைவர்களாகவும், பி. வி. கிருஷ்ணய்யர், எம். ஆர். விட்டல் கூட்டுக் காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேம்பரின் வருஷாந்தரக் கூட்டம்

தென்னிந்திய பிலிம் சேம்பரின் பத்தாவது வருஷாந்தரக் கூட்டம் சென்ற மாதம் 30-ம் தேதி புதிய தலைவர் டி. ஆர். சுந்தரத்தின் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் பேசுகையில், சினிமாத் துறையில் சம்பந்தப் பட்டிருப்பவர்களை சர்க்கார் சிறிதும் மதிப்பதே இல்லை யென்றும், சினிமாத் தொழில் சம்பந்தமாக இந்திய சர்க்கார் நியமித்திருக்கும் கமிட்டியின் சிபாரிசுகள் தெரியும் வரை, சர்க்கார் இத்தொழில் மீது கை வைக்கக் கூடாதெனவும் குறிப்பிட்டார்.

பிறகு கூட்டத்தில், இந்திய சர்க்கார் நியமனம் செய்யப் போகும் 'விசாரணைக் கமிஷன்' சிபாரிசுகள் தெரியும் வரை, சினிமாத் தொழில் மீதுள்ள எல்லாப் புது வரிகளையும், உத்தேச வரிகளையும் கைவிடுமாறு மத்திய, மாகாண சர்க்கார்களைக் கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நாடு முழுதும் ஹர்த்தால்

மாகாண சர்க்கார்கள் சமீபத்தில் தமாஷா வரிகளை உயர்த்தியதை ஆக்ஷேபித்து இந்தியா முழுவதிலுமுள்ள சினிமாக் கொட்டகைகள், ஸ்டுடியோக்கள், படவினியோகக் கம்பெனிகள் சென்ற மாதம் 30-ம் தேதி அடையாளபூர்வமாக ஹர்த்தால் நடத்தின. இப்படி நாட்டிலுள்ள தியேட்டர்கள் அனைத்தும் ஒரேநாளில் மூடப்பட்டது இது தான் இந்தியாவில் முதல் நடவை.

சென்னை மாகாணத்திலுள்ள 126 தியேட்டர்கள், 11 ஸ்டுடியோக்கள், 400 படத் தயாரிப்பு வினியோகக் கம்பெனிகள் ஆகியவை இந்த ஹர்த்தாலில் கலந்து கொண்டன.

செய்திப் படங்களைத் திரையிட மறுப்பு

செய்திப் படங்கள் 'ரஸமாக இருப்பதற்குப் பதில் பார்ப்பவர்கள் அருவருப்பு அடையும் வகையில் இருக்கிறது' என்று காரணம் கூறி லண்டனில் 55 தியேட்டர்கள் செய்திப் படங்களைத் திரையிட மறுத்து விட்டனவாம்.

சினிமா ரஸிகர்கள் சங்கம்

இம் மாதம் 16-ம் தேதி சித்ரா டாக்கிஸில் சினிமா ரஸிகர்களின் சங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. கல்வி மந்திரி கனம் கே. மாதவ மேனன் 'சினிமா' கல்வி கற்பிப்பதற்கு சிறந்த சாதனம்' என்பதைப் பற்றிப் பேசினர்.

வாழ்த்துகிறோம்

ஜூபிடர் பிக்சர்ஸ் நடிகரான ஸ்ரீ. நரசிம்ம பாரதி, சௌ. இந்திராவை இம்மாதம் 3-ம் தேதி மதுரையில் தமது வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

சினிமா நடிகர் ஜி. ஆர். வரதாச்சாரி தமது இரண்டாவதுபுத்திரியான சௌ. ஜானகியை, ஸ்ரீ. டி. கல்யாணராமனுக்கு இம்மாதம் 7-ம் தேதியன்று திருச்சியில் மணம் செய்து வைத்தார்.

மைலாப்பூர் வக்கீல் வி. சுந்தரம் அய்யரின் புத்திரியும், சினிமா நடிகர்களான எஸ். ராஜம், எஸ். பாலசந்தர் இவர்களின் சகோதரியுமான எஸ். கல்பகத்தின் திருமணம் இம் மாதம் 13-ம் தேதி நடைபெற்றது. மணமகன் ஸ்ரீ. கே. கே. பாலகிருஷ்ணன்.

இந்தப் புதுத் தம்பதிகளுக்கு நமது ஆசிகள்.

துப்பறியும் சாம்பு

[55-ம் பக்கத் தொடர்ச்சி]

மாடர்ன் தியேட்டர்ஸ் நிர்வாகஸ்தரான டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் தென்னிந்திய பிலிம் சேம்பரின் இவ் வருஷத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

எட்டே முக்கால் மணிக்குள் தங்கள் கச்சேரிகளை முடித்துக் கொள்ளுவார்கள். அதற்குமேல் நடந்தால் மளமளவென்று கூட்டம் கலைய ஆரம்பித்துவிடும். ஆனால் "சாம்பு"வின் மேல் ஏற்பட்ட ப்ரீதியினால் சபையோர் பத்தேகால் மணி ஆகியும், நாடகம் முடியும் வரை ஒருவர்கூட எழுந்திராமல் பார்த்து விட்டுச் சென்றது ஆச்சரியமாயிருந்தது.

சாம்புவின் பாத்திரத்தை "தேவன்" எப்படி வர்ணித்திருந்தாரோ அப்படியே (மூக்கு உள்படத்தான்!) உயிர்ப்பித்து நடித்தார் என். எஸ். நடராஜன். பேச்சு நடை, உடை, பாவனை, மேக்கப் எல்லாம் தத்ரூபம். "ஒரு வேளை நடராஜனை மனதில் வைத்துக் கொண்டுதான் 'தேவன்' சாம்புவை சிருஷ்டித்தாரோ?" என்று கேட்கும்படியாயிருந்தது.

சாம்பு மட்டுமல்ல; மற்ற பாத்திரங்களை நடித்தவர்களும் அநேகமாக தம் வேஷத்தை உணர்ந்து நடித்ததனால் தான் அன்றைய நாடகம் அவ்வளவு சோபித்தது. இன்ஸ்பெக்டர் கோபாலனாக நடித்த எஸ். ஆர். கிருஷ்ணஸ்வாமி, வெங்கிட்டுவாக நடித்த வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, பாங்க் மானேஜிங் டைரெக்டராகவும், ஆசிரியராகவும் நடித்த ஸி. வி. நாகராஜன், கமிஷனராக நடித்த யு. ராஜகோபால், வேம்புவின் தகப்பனாராக நடித்த எஸ். கே. சுப்ரமண்யம் இவர்களுடைய நடிப்பு குறிப்பிடத் தக்கது.

"ஆண்கள் பெண் வேஷம் ஏற்கக் கூடாது என்று கூறுபவர்கள் இந்த நாடகத்தைப்பார்த்தால் அவ்வெண்ணத்தை மாற்றிக் கொண்டு விடுவார்கள்" என்று ஸ்ரீமான் கோபாலரத்னம் தம் தலைமை உரையில் கூறினார். அது முற்றிலும் உண்மை. முக்கியமாக, லக்ஷ்மியின் வேஷத்தை ஆர். ஸ்ரீநிவாஸராகவனும், வேம்புவின் வேஷத்தை எஸ். வி. வெங்கட்டராமனும், அவளது தாயாரின் வேஷத்தை கே. ரங்கராவும் அசல் பெண் பிள்ளைகள் மாதிரியே நடித்துக் காட்டியது மிகப் பாராட்டத் தக்கது.

இந்த நாடகத்தில் நலங்குக் காட்சி ஒன்று நடத்தப் பட்டது. இது மிக நன்றாயிருந்தது. ஆனால் கதைப் போக்கில் அந்த இடத்தில் சிறிது தேக்கம் ஏற்பட்டது.

பத்திரிகாசிரியர் ஒருவர் சாம்புவின் கட்டுரைக்காக படாத பாடு படுவதாகக் காட்டப்படுகிறது. இது தமாஷுக்காகப் புகுத்தப்பட்டிருப்பினும், அவ்வளவு உயர்ந்த ஹாஸ்யமாகப் படவில்லை. அருவருப்பாயுள்ள இக்காட்சிகளை அறவே நீக்கிவிடுவது நலம்.

இந்த நாடகத்தின் நீளம் குறைக்கப் பட்டே ஆக வேண்டும். அப்பொழுதே நடிப்பவர்களுக்கும் சரி; பார்ப்பவர்களுக்கும் சரி; சௌகரியமாய் இருக்கும். வேண்டுமானால் ஒரே மாதிரியாயுள்ள சில சம்பவங்களை நாடகத்திலிருந்து நீக்கிவிடலாம்.

மொத்தத்தில், "துப்பறியும் சாம்பு" நாடகம் ஒரு உன்னத வெற்றியாகும். "இந்த 'அமெச்சூர்' நடிகர்களின் நடிப்புத் திறனை தம் தொழில் நடிகர்கள் பார்த்தால் வெட்கித் தலை குனிய வேண்டியதே" என்று எண்ணியபடியே நான் வீடு திரும்பினேன்.

—பி. ஆர். எஸ்.

பிரம்மலோகம்

திஷான், காந்திமதி

எஸ். எஸ். வாஸனின் டைரெக்ஷனில் இடைவிடாது தயாராகி வருகிறது 'திஷான்' ஹிந்திப் படம். இப்படத்தில் ஒரு முக்கியபாத்திரத்தில் நடிக்க மாயா பானர்ஜி சென்னைக்கு வந்திருக்கிறார். தீபாவளியன்று இப்படம் இந்தியா வெங்கும் திரையிடப் படுமெனத் தெரிகிறது. கூடவே 'காந்திமதி' படமும் ஆச்சாரியாவின் டைரெக்ஷனில் வளர்ந்து வருகிறது.

வாழ்க்கை

மெரினாவில் கொளுத்துகிற வெய்யிலில் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு மங்கையிடம் ஒரு கிருதாக்காரன்வந்து "உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. இந்த ரூபாயை வைத்துக்கொள்" என்று கூறி ஐந்து ரூபாய் நோட்டை நீட்டுகிறான். அதைப் பார்த்த பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம் தர்மம் கேட்கிறான். கிருதாக்காரன் அவன் சட்டியைத் தட்டிவிட அது கீழே விழுந்து உடைகிறது. இந்தக் காட்சி சமீபத்தில் ஏவி. எம். 'வாழ்க்கைப்' படத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. இது தீபாவளி வெளியீடாக இருக்கும் என்று தெரிகிறது.

இதய கீதம்

ஜோஸப் தளியத்தின் டைரெக்ஷனில் நியூடோனில் உருவாகி வருகிறது. டி. ஆர். ராஜகுமாரியும் மஹாலிங்கமும் பிரதம பாகங்களில் நடிக்கும் இப் படத்தில் டி. பி. ராஜலக்ஷ்மியும் நடிக்கிறார்.

ரத்னகுமார்

முருகன் டாக்கீஸாரது 'ரத்னகுமார்' அடுத்தமாத மத்தியில் திரையிடப் படலாமெனத் தெரிகிறது. பி. யு. சின்னப்பா, பானுமதி, எம். கே. மீனலோசனி, கிருஷ்ணன், மதுரம் பிரதம பாகங்களில் நடிக்கும் இப் படத்தில் மாலதியும் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். டைரக்டர்கள் கிருஷ்ணன் பஞ்சு.

லைலா மஜ்னு

மஹாலிங்கம், ராஜம்மா பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படம் நாகூர் டைரெக்ஷனில் உருவாகி வருகிறது. வில்லனாக எஸ். வி. சகஸ்ரநாமம் நடிக்கிறார்.

மங்கையர்க்கரசி

நாகூரின் மேற்பார்வையிலே, 'மங்கையர்க்கரசி'யை கவர்ச்சிகரமான முறையில் டைரெக்டர் ஜிதன் பானர்ஜி தயாரித்து முடித்து விட்டாராம். ஆகஸ்ட் மாதத்தில் திரையிடப்பெறும் படங்களில் இது ஒன்றாக இருக்குமாம்.

மச்சரேகை

இப்படத்தில் அஞ்சலி தேவிக்காக சில பாட்டுகள் வஸந்தகுமாரியால் பாடப்பட்டு, சமீபத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டன. படப் பிடிப்பும் நடந்து வருகிறது.

தேவமனோஹரி

ஆர். கே. எஸ். பிக்சர்ஸாரது 'தேவமனோஹரி'யின் படப் பிடிப்பு நெப்டியூன், பிரகதி, ஸ்டார் கம்பைன்ஸ் ஆகிய மூன்று ஸ்டுடியோக்களிலும் நடைபெற்று வருகிறது. இம்மாத இறுதிக்குள் படம் தயாராகி விடுமெனத் தெரிகிறது.

மாயாவதி

கணபதி பிக்சர்ஸின் 'மாயாவதி' அடுத்த மாதம் 12ம் தேதி தமிழ்நாடெங்கும் திரையிடப் படும். டி. ஆர். சுந்தரம் டைரெக்ட் செய்து வரும் இப் படத்தில் மஹாலிங்கமும், அஞ்சலி தேவியும் பிரதம பாகங்களில் நடித்திருக்கின்றனர்.

பொன் முடி

மாதுரிதேவியைக் கதாநாயகியாகக் கொண்டு 'பொன்முடி'படப்பிடிப்பை டைரெக்டர் எல்லிஸ். ஆர். டங்கன் நடத்தி வருகிறார்.

இன்பவல்லி

பி.எஸ். சரோஜா, மஹாலிங்கம் பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படம் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் திரையிடப்படுமெனத் தெரிகிறது. இப்படத்தை நொடானி டைரெக்ட் செய்து வருகிறார்.

கன்னியின் காதலி

ஜுபிடரின் (ராம்நாத்-சேகர் தயாரிப்பான) 'கன்னியின் காதலி' ஆகஸ்ட் மாதம் 6-ந் தேதி ரஸிகர்களுக்குக் காட்சி அளிப்பாள். மாதுரி தேவி, அஞ்சலி தேவி, சாரங்கபாணி முதலியவர்கள் இதில் நடிக்கின்றனர்.

பாமி

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

'சான்ஸ்' கொடுக்க ஏற்பாடு செய்யுங்களேன்" என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. "குஸுமாவாவது, நாலுபேர் முன்னால் உட்கார்ந்து கச்சேரி பண்ணுவதாவது" என நினைத்தேன்.

ஆனால் கடைசியில் கிழவரின் உபத்திரவம் தாங்காமல் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தேன். அத்துடன் எனது பத்திரிகையிலும் அவளுடைய 'போட்டோ'வைப் போட்டு விளம்பரம் செய்து வைத்தேன்.

ஹரிஹரன் அதைப் பார்த்துவிட்டு என்னிடம். "ராம, ராம, உன் புத்தி இப்படியா போகவேண்டும்?" என்று தலையிலடித்துக் கொண்டான். முட்டாள். அவனுக்கென்ன தெரியும் காதலின் சக்தியைப் பற்றி ?

சபாக் கச்சேரி மிகப் பிரமாதமாக அமைந்து விட்டது. ஏகக் கூட்டம். ஆயினும் குஸுமா, பயப்படாமல் தைரியமாகப் பாடினாள். முதன் முதலாக பெரிய சபையில் அபூர்வமாக பாடி பெயரும் பெற்று விட்டாள். நாணுவய்யருக்கும் அவர் மனைவிக்கும் தாங்க முடியாத சந்தோஷம். எல்லோரையும் விட என் மனம்தான் அதிகசந்தோஷமடைந்தது.

ஏன் ? அது தான் எனக்கும் புரியவில்லை. ஹரிஹரன் கூட குஸுமாவைப் பற்றி என்னிடம் ரொம்பவும் புகழ்ந்தான். குஸுமாவோ, தனது புகழுக்கு நான்தான் காரணமென்று கூறி என்னை பாராட்டினாள். இவ்வளவு புகழ்ச்சிக்கிடையில் குஸுமாவின் கச்சேரியைப் பாராட்டி எனது பத்திரிகைக்கு அநேக கடிதங்கள் வந்தன.

அவ்வளவையும் நான் பிரசுரித்தேன். "வண்டு" என்ற புனைப்பெயருடன் நானே அவளது கச்சேரியைப் பற்றி மிக உயர்வாக எழுதியிருந்தேன். அதைப் படித்து விட்டு எனது மேலாசிரியர், "மிஸ்டர் ராகவன், உங்கள் எழுத்தில் இப்பொழுதுதான் ஒரு புது வேகமும் அழகும் பிறந்திருக்கிறது, சபாஷ் !" என்று பாராட்டினார்.

குஸுமாவுக்கும் நான்தான் "வண்டு" என்பது நன்றாகத் தெரியும். மலருக்குத் தெரியாதா தன்னைச் சுற்றிவரும் வண்டைப் பற்றி !

அன்று மத்தியானம் எனக்கு ஆபீஸில் அதிக வேலையொன்றும் இல்லாததால், வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். வீட்டில் நாணுவய்யரையும் அவர் மனைவியையும் காணவில்லை. குஸுமா மட்டுமே இருந்தாள். "அம்மாவும் அப்பாவும் எங்கே ?" என்று கேட்டேன்.

"அடுத்த தெருவுக்குப் போயிருக்கிறார்கள் ; வர நாழியாகும்...... நின்று கொண்டே யிருக்கிறீர்களே, உட்காருங்கள்" என்றாள் குஸுமா.

சகஜமாகவே பழகி வந்ததன் காரணமாக எதிரே உட்கார்ந்தேன். பேச ஆரம்பித்தோம். முதலில் எதைப்பற்றி என்று எங்களுக்கே தெரியாது. ஆனாலும் என்னென்னவோ பேசினோம். எத்தனையோ கோட்டைகள் கட்டினோம். வளைத்து வளைத்துச் சொல்வானேன் ? எங்கள் மனதில் உள்ளதை வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டோம்.

அன்றிரவு நாணுவய்யர் ஒரு புது சமாசாரத்துடன் என்னிடம் வந்தார்.

"ஸார், நீங்கள் ஆபீஸுக்குப் போனப்புறம் இன்று காலமே ஒருவர் என்னிடம் வந்தார். பெரிய பணக்காரர்போலிருந்தார். குஸுமாவின் கச்சேரியை பிரமாதமாகப் புகழ்ந்தார். அவர் ஒரு சினிமாக் கம்பெனி முதலாளியாம். நம்ம குஸுமாவை அவருடைய படத்தில் சேர்க்க வேண்டுமாம். சம்மதமா என்று கேட்டார். உங்களைக் கலந்துகொண்டு சொல்லுவதாகச் சொன்னேன். நாளை திரும்பவும் வருவதாகச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்" என்றார்.

"அதெல்லாம் நம்ம குடும்பத்துக்கு அழகல்ல, சினிமாவில் சேர்ந்தால் நிறைய பணம் கிடைக்கலாம். ஆனால் குஸுமாவின் வாழ்க்கை பாழாகிவிடும்" என்று காரசாரமாகப் பதில் அளித்தேன்.

"எனக்கென்ன ஸார் தெரியும்சினிமாவைப் பற்றி. குஸுமா உங்களுடைய சொத்து. அவளைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் பொறுப்பு. உங்களிஷ்டப்படி எது செய்தாலும் எனக்குச் சம்மதம்" என்றார். அதோடு வேறொரு விஷயத்தையும் என்னிடம் சொல்லி வைத்தார். "ஸார், இந்த வருஷமாவது அவளுக்குக் கல்யாணம் செய்தால் தேவலை. எனக்கும் என் சம்சாரத்துக்கும் உங்களை விட்டுட்டு வேறே மாப்பிள்ளை தேட இஷ்டமில்லை. உங்க அபிப்பிராயம் என்னவோ ?" என்று இழுத்தார்.

"கவலைப்படாதீங்கோ, தை பிறக்கட்டும்; வழி தானாகவே பிறந்து விடும்" என்றேன்.

அவர் சந்தோஷத்துடன் சென்றார்.

குஸுமாவுடன் பழகிய நாள் முதல் அன்றுவரையிலும் "கல்யாணம்" என்ற எண்ணமே என் மனதில் தோன்றவில்லை. நாணுவய்யரின் வார்த்தைகளைக் கேட்டவுடன் என்மனது குழம்பிவிட்டது. அவர்கள் என்னையே நம்பிக்கொண்டிருக்கிறார்கள். குஸுமாவும் என்னைத்தான் விரும்புகிறாள். ஆனால் நான்?— குஸுமா எனது உள்ளத்தில் வீற்றிருந்தாள் என்பதில் சந்தேகமே யில்லை. அவளைத்தவிர வேறு பெண்ணைக் கனவிலும் கருதக் கூடாது என்று என் மனம் செய்த சபதமும் பொய்யில்லை. அப்படியானால் அவளை மணந்து கொண்டாலென்ன? பெற்றோர்களைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. என்னை அவர்கள் நன்கறிவார்கள். நான் செய்வதைத் தடுக்கவும் மாட்டார்கள். பின் குஸுமாவை மணந்துகொள்ளத் தயங்குவானேன்! அதுதான் எனக்கும் புரியவில்லை. இப்படியாக பலவித எண்ண அலைகளினால் மோதப்பட்டு இரவு முழுவதையும் சிவராத்திரியாகக் கழித்தேன்.

3

மறுநாள் காலையில் நான் ஆபீஸுக்குப் போனபோது, எனக்கு ஒரு தந்தி காத்திருந்தது; என் ஊரிலிருந்து வந்த தந்தி அது. நான் படபடப்புடன் அதைப் பிரித்தேன். அதில், "அவசர விஷயம்; உடனே புறப்பட்டு வா" என்று என் தந்தை எழுதியிருந்தார். உடனேயே ஒரு வாரம் லீவ் எடுத்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தேன். பிறகுதான் அந்த "அவசர விஷயம்" என்னவென்று தெரிந்தது. என் தகப்பனாரும் தாயாரும் சேர்ந்து எனக்கொரு பெண்ணை நிச்சியம் செய்து வைத்திருந்தனர். என்னைக் கேட்காமலே சகல விஷயங்களும் முடிவாகி, ஆயிரம் ரூபாயும் பெற்றுக்கொண்டு, நிச்சியதாம்பூலமும் நடத்தி விட்டார்கள். இதை எல்லாம் பார்த்தவுடன் எனக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. "என்னை சிறு பிள்ளை என்று நினைத்துவிட்டீர்களா? யாரிடம் கேட்டுக்கொண்டு இவ்வளவு ஏற்பாடும் செய்தீர்கள்? கல்யாணம் செய்து கொள்ளப் போவது நானா அல்லது நீங்களா?" என்று கூச்சல் போட்டேன்.

என் தந்தை நடு நடுங்கி விட்டார். தாயாரோ, "என்னவோ நல்ல இடத்திலே யிருந்து வந்த சம்பந்தத்தை விடக் கூடாதேன்னு ஏற்பாடு செய்துட்டோம். நீயும் தட்டமாட்டாய்னு நினைச்சோம். உனக்கு இஷ்டமில்லைன்னு நிறுத்திடலாம்" என்றாள்.

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. நிச்சியதாம்பூலம் நடந்து, முகூர்த்த நாள்கூட குறிப்பிட்டு எல்லோருக்கும் பத்திரிகை அனுப்பிவிட்டார்கள். இனிமேல் "நிறுத்திவிடலாம்" என்றால் அது சாத்தியமா? அங்கே குஸுமா என்னை மாலையிடக் காத்திருக்கிறாள். இங்கேயோ வேறொரு பெண் மாலையிட நிச்சியமாகிவிட்டாள்.

கடைசியில் என் பெற்றோர்களின் கட்சிதான் ஜெயித்தது. குறிப்பிட்ட முகூர்த்தத்தில் எனக்கும், திருப்பதிசாரம் மிராசுதார் கணபதி ஐயர் பெண் சரஸ்வதிக்கும் கல்யாணம் நடந்தேறியது. யாருக்குமே நான் அழைப்பு அனுப்பவில்லை. ஹரிஹரன் மட்டும் எப்படியோ அறிந்துகொண்டு வந்திருந்தான். அவனுக்கு ரொம்ப சந்தோஷம். நம்பின பெண்ணை — அவன் சொன்னதுபோல் நான் நடுத்தெருவில் விட்டுவிட்டேனல்லவா?

விவாகம் முடிந்து சென்னைக்குப் போகவே எனக்கு வெறுப்பாக இருந்தது. மூன்று மாத காலத்திற்கு லீவ் எடுத்துக் கொண்டேன். அந்த மூன்று மாதத்திற்குள் நாணுவய்யரும், குஸுமாவும் எனக்கு நான்கு கடிதங்கள் எழுதினார்கள். நாணுவய்யர் என் விவாகத்தை அறிந்து விட்டார். "நீ நாசமாய்ப் போக" என்ற ஆசிச் செய்தியை அவரது ஒவ்வொரு கடிதமும் தாங்கி வந்தது. குஸுமாவோ "இப்படி மோசம் பண்ணவா என்னிடம் அவ்வளவு பிரியமாயிருந்தீர்கள்? உங்கள் கையாலேயே என்னைக் கொன்றுவிட்டுப்போயிருக்கக் கூடாதா!" என்றெல்லாம் எழுதியிருந்தாள். நான் பதிலே எழுதவில்லை. எப்பொழுதும் எந்நேரமும் பித்துப் பிடித்தவன் மாதிரியிருந்தேன். புது மனைவி எனக்கு உத்சாகமூட்ட முயன்றாள். தாயும் தந்தையும் என்னை சந்தோஷப்படுத்துவதற்காகப் பெரும் பாடுபட்டார்கள். ஒன்றும் பயனில்லை.

கடைசியில் மூன்றுமாத லீவும் முடிந்தது. நான்சென்னைக்குப்புறப்பட்டேன்.

4

சென்றுபோன இந்த நினைவுகள் எல்லாம், ரயிலில் குஸுமாவைப் பார்த்தவுடன் குமுறிக்கொண்டு கிளம்பின. வெளியிலிருந்து வீசிய காற்று என் கண்களிலிருந்து வடிந்த நீரைத்துடைத்தது; ரயில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

"என்னம்மா, எங்கே போயிட்டு வறீங்க?" என்று யாரோ கேட்கும்சப்தம்

கேட்கவே நான் நிமிர்ந்து பார்த்தேன். குஸுமாவின் தாயாரிடம் வேறொரு பெண் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"மானுமதுரையிலிருந்துவரேன். என் தம்பி அங்கே யிருக்கிறான். இந்தப் பொண்ணுக்கு அங்கே ஒரு மாப்பிள்ளை பார்த்திருந்தான். எங்களை வரச்சொல்லி கடிதம் போட்டான். போயிட்டுவரேன்" என்றாள் குஸுமாவின் தாயார்

எனக்குப் புல்லரித்தது. அவர்கள் பேசுவதைக் கவனித்தேன்.

"கல்யாணம் நிச்சயமாயிட்டுதுங்களா?" இது அந்தப் பெண்ணின் கேள்வி.

"இல்லை, அந்தப் பையனுக்கு இப்போ கல்யாணம் வேண்டாமாம். ஹூம்! தலை எழுத்துப் போல்தானே எல்லாம் நடக்கும்? போன வருஷம் எங்க விட்டோடு ஒரு பையன் இருந்தான். அவனை நிச்சியம் பண்ணலாம்னு நினைச்சோம். அந்தப் பாவியும் கடைசிவரை சம்மதிச்சுட்டு, திடீர்னு ஊருக்குப் போய் வேறே கல்யாணம் பண்ணிண்டுட்டான். அவன் தலையிலே இடிதான் விழனும்..." என்று ஆத்திரத்துடன் கூறினாள் குஸுமாவின் தாயார்.

ஹிருதயம் திடீரென்று நின்றது போலிருந்தது எனக்கு. அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் என்னைச் சித்திரவதை செய்தது. இதற்குள் பொழுதும் நன்றாக விடிந்து விட்டது. ரயில் பேரிரைச்சலுடன் எழும்பூர் ஸ்டேஷனில் வந்து நின்றது. குஸுமாவும் அவள் தாயாரும் மூட்டை முடிச்சுகளுடன் இறங்கிச் சென்றார்கள். நல்ல வேளையாக அவர்கள் என்னைக் கவனிக்கவே வில்லை.

இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு ஒரு நாள் காலை, என் பத்திரிகையில் போடுவதற்காக ஒரு விளம்பரம் வந்தது. அத்துடனிருந்த போட்டோவைப் பார்த்ததும் நான் பிரமித்து விட்டேன்.

"புதிய நக்ஷத்திரம், கான கலாவதி மிஸ். குஸுமா நடிக்கும் 'முறிந்த காதல்' பாரிஜாதா பிக்சர்ஸின் உன்னத தயாரிப்பு" என்பது விளம்பரம்.

இதை என் ஆசிரியரும் கவனித்தார். "ஏன் ஸார், நீங்கள் முன்பு குடியிருந்த வீட்டுக் காரருடைய பெண்ணல்லவா இவள்? சினிமாவில் சேர்ந்து விட்டாளா? அட பாவமே! அவள் தகப்பனுருக்கு இப்படிச் செய்ய எப்படி மனம் வந்தது? மஹா பாபிதான் ஸார், அவர்" என்றார்.

நான் பதில் பேசவில்லை. மஹா பாபி நானுவய்யரா; அல்லது நானு என்பது அவருக்கு எப்படித் தெரியும்?

எனது
புதிய விலாஸம்

★

சங்கீதம்:
எம். எல்.
வஸந்தகுமாரி
நெ. 2, ராமசாமி தெரு,
தியாகராய நகர்,
சென்னை-17.

விலாஸ மாறுதல்

★ ★

வி. சுப்புலக்ஷ்மி
டி. வி. வேலய்யா,
26, அப்துல் அஜீஸ் தெரு,
தியாகராய நகர்,
சென்னை-17.

அச்சடிப்பதற்கும் இதர
உபயோகங்களுக்கும் ஏற்ற
எல்லாவிதமான

காகிதங்கள்

அட்டைகள், காலிகோ, உலோகங்கள்,
பித்தளை, தாமிரத் தகடுகள், கம்பிகள்,
வீட்டுச்சாமான்கள்,

முதலியவைகள் எங்களிடம் கிடைக்கும்

உங்கள் தேவைக்கு உடனே எழுதுங்கள்

பி. எஸ். என். எஸ். அம்பலவாண
செட்டியார் & கோ., லிமிட்.,

[ஸ்தாபிதம் 1904]

2-34, தங்கசாலைத் தெரு, பி. டி. சென்னை-3.

மானேஜிங் ஏஜண்டுகள்:

பி. எஸ். நஞ்சப்ப செட்டி & ஸன்ஸ்.

பிராஞ்சுகள்:

பம்பாய் - கொச்சி - கோயமுத்தூர் - திருப்பூர்

தந்தி: "METALMEN"

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing Hous
46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gop
(Gundoosi), at 25 Godown Street, Madras-1. Telephone 4316.

முயற்சி வீணாவதை தடுக்கலாம்

உங்களுக்கு தேவையான அச்சு வேலைகளை தீர ஆலோசித்துத் திட்டத்துடன் செய்தீர்களானால், குறைந்த செலவில் நிறைந்த பலனை அடையலாம்.

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அனுபவமும், பழக்கமும் அவசியம். பல வருஷங்களாக நாங்கள் நானாவித அச்சு வேலைகளைச் செய்து நல்ல அநுபவம் பெற்றுள்ளோம். நீங்கள் கண்டபடி முயற்சி செய்து நஷ்டம் அடைவதற்குப் பதில், எங்கள் அநுபவத்தைக் குறைந்த செலவில் உபயோகித்துக் கொண்டு மிகுந்த பயனடையலாம்.

போன் : 4037

தந்தி : "PRINTHOUSE"

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்

45/46, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை-1.

மகத்தான ஆரம்பவிழா......
ஆகஸ்டு 12உ
ஆயிரம் எண்ணங்களை
எழுப்பும் எழில் மங்கை
விரைவில் வருகிறாள்
எதிர்பாருங்கள்!
கடமைக்கும் காதலுக்கும்
இடையே ஏங்கும் மன்னன்!
அழகியை அடைய
ஆசிக்கும் அவலக்ஷணன்!
காதலை வெறுத்தவனை
கணவனாக்கிக் கொண்ட கதை
சங்கீதம்:
G.ராமநாதன்
பாட்டு:
K.M.ஷெரீப் &
A.மருதகாசி.
கதை & வசனம்
P.கண்ணன்
கணபதி பிக்சர்ஸாரின்
மாயாவதி
டைரக்ஷன்
T.R.சுந்தரம்
B.A.B.Sc.(Leeds)
மஹாலிங்கம். அஞ்சலிதேவி. சுப்பையா.
காளிரத்னம். ராஜகாந்தம். லலிதா. பத்மினி
ஸ்டுடியோ. மாடர்ன் தியேட்டர்ஸ்.

(1)	(2)	(1)	(2)